இலக்கு

வாரமிருமுறை மின்னிதழ்


GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 418

சனி, 21 நவம்பர், 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org



எப்.பி.ஐ. வருகையின் பின்னணி – சீனாவின் குற்றக் கும்பல்களா?

விதுரன்







2035-ஆம் ஆண்டிற்குள் இஸ்லாம் உலகின் மிகப்பெரிய மதமாக மாறும்

தமிழில்: ஆர்தீகன்

வாராந்த மின்னிதழ் | இதழ் 418 | செய்திகள்
சனி, 21 நவம்பர், 2026 | பக்கம் 02

ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து பரப்பப்படும் செய்தி உண்மைக்குப் புறம்பானது: அரசாங்கம் அறிவிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் நிறைவடையும் எனப் பரப்பப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இச்சலுகைக் காலம் 2026 டிசம்பர் முதல் 2028 டிசம்பர் வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இது தொடர்பாக வீணாக அச்சமடையத் தேவையில்லை என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிறைவடைவது குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கைக்கு, ஐரோப்பியச் சந்தைக்கு வரியின்றி அல்லது குறைந்த வரியில் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காகவே இந்த விசேட வரிச்சலுகை வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில் ஏழு ஆண்டுகளாக இச்சலுகை இலங்கைக்கு மறுக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீண்டும் தடையின்றிப் பெற்றுக்கொள்வதற்கான பணிகளை முன்னெடுப்பதற்காக அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகியோரின் தலைமையில் ஒன்பது அமைச்சர்களைக் கொண்ட விசேட அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைக் குழுவின் வழிகாட்டலில், அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட

தொடர்ச்சி: பக்கம் 16

செல்வராசா கஜேந்திரனிடம் யாழ். குற்றத்தடுப்புப் பிரிவு வாக்குமூலம் பதிவு செய்தது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செல்வராசா கஜேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் முன்னிலையானார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் பெண் மாவீரரான இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று (20) காலை குறித்த பிரிவில் அவர் முன்னிலையானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிகழ்வு தொடர்பான விசாரணைக்காக, யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவில் நேற்று முன்தினம் (19) காலை 9.00 மணிக்கு முன்னிலையாகுமாறு செல்வராசா கஜேந்திரனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

எனினும், அம்பாறையில் நேற்று முன்தினம் (19) முன்னெடுக்கப்பட்ட

தொடர்ச்சி: பக்கம் 14

பண்ணையாளர்கள் மீது பொய்யான வழக்குகள் தாக்கல்

மட்டக்களப்பு மாவட்டம், பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவுளிமடு மேய்ச்சல் தரைப் பகுதியில் மாடுகளைப் பராமரித்து வரும் சில பண்ணையாளர்கள் மீது அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகப் பொய்யான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நேற்றைய தினமும் பண்ணையாளர்கள் மீது வனவளத் திணைக்களத்தினரால் பொய்யான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் மீண்டும் குறித்த பகுதிக்குச் சென்ற வனவளத் திணைக்களத்தினரும் சில சிங்களவர்களும், பண்ணையாளர்கள் தமது மாடுகளைப் பாதுகாப்பாகப் பராமரிப்பதற்காக அமைத்திருந்த தற்காலிகக் கொட்டில்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்து அகற்றி வருவதாகப் பண்ணையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 16

ரோஹிங்கியாக்களுக்கு எதிராக 'இனப்படுகொலை நோக்கம்' கொண்டிருந்ததாக மியான்மர் மீது ஐநா உயர்மன்றம் தீர்ப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மை நீதிமன்றம், 2017-ஆம் ஆண்டு மியான்மர் ராணுவ நடவடிக்கைகளின் போது 10,000 ரோஹிங்கியா மக்கள் கொல்லப்பட்ட சம்பவங்களில், மியான்மர் "இனப்படுகொலை நோக்கத்துடன்" செயல்பட்டதாகத் தீர்ப்பளித்துள்ளது. ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் (ICJ), மியான்மர் ராணுவம் மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள் குறித்த தனது தீர்ப்பை வியாழக்கிழமை வழங்கியது. இந்த ராணுவ நடவடிக்கைகளால், முஸ்லிம் பெரும்பான்மையினரான 7,30,000-க்கும் மேற்பட்ட ரோஹிங்கியா மக்கள் அண்டை நாடான வங்கதேசத்திற்குத் தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர்.

சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் யூஜி இவாசாவா, மூன்று மணி நேரம் நீடித்த தீர்ப்பு வாசிப்பின் போது, மியான்மர் படைகள் சுமார் 10,000 ரோஹிங்கியாக்களைக் கொன்றதற்கான ஆதாரங்கள் உள்ளதாகத் தெரிவித்தார். "மியான்மரின் பாதுகாப்புப் படைகள் ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா பொதுமக்களைக் கொன்றுள்ளன; பரவலான பாலியல் வன்முறைகளை நிகழ்த்தியுள்ளன; குழந்தைகள் மீது கடும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. மேலும், வங்கதேசத்தை நோக்கி பெருமளவில் தப்பிச் சென்ற ரோஹிங்கியாக்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளன" என்று அவர் கூறினார்.

தொடர்ச்சி: பக்கம் 08

இந்திய ஜனநாயகத்தை விமர்சித்த இத்தாலிய அரசியல்வாதி



இத்தாலிய அரசியல்வாதி ஒருவர், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியாவின் ஜனநாயகத்தை விமர்சித்ததன் மூலம் அங்கு பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளார். சுமார் இருநூறு ஆண்டுகள் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவின் உணர்வுப்பூர்வமான ஒரு விஷயத்தைத் தொடும் வகையில் இந்த விமர்சனம் அமைந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சி (BJP) உள்ளிட்ட இந்திய அரசியல் கட்சிகள், எதிர்க்கட்சியான காங்கிரஸ், இந்தியாவின் உள்நாட்டு அரசியல் விவாதங்களில் வெளிநாட்டினரை அனுமதிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளன. இதற்கிடையில், 'ஐரோப்பிய சோசலிஸ்டுகளின் கட்சியின்' (PES) பொதுச் செயலாளர் ஜியாகோமோ ஃபிலிபெக், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டதன் மூலம் தனது விசா நிபந்தனைகளை மீறியுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமையன்று (14), தென்னிந்திய நகரமான ஹைதராபாத்தில் ராகுல் காந்தியுடன் ஒரே மேடையைப் பகிர்ந்துகொண்ட ஃபிலிபெக், மோடி அரசாங்கத்திற்கும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் தேர்தல்களை நடத்தும் பொறுப்பைக் கொண்ட தேர்தல் ஆணையத்திற்கும் எதிராக, இந்திய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அடிக்கடி பயன்படுத்தும் முழக்கம் ஒன்றை மீண்டும் கூறினார்.

"வோட் சோர், கட்தி சோட்" (Vote chor, gaddi chhod) என்று அவர் ஒரு கூட்டத்தில் முழங்கினார். பின்னர், ராகுல் காந்தி கைதட்ட, அந்த முழக்கத்தை ஆங்கிலத்தில் "வாக்குத் திருடனே, பதவியை விட்டு விலகு" (vote thief, leave your seat) என்று மொழிபெயர்த்துக்

தொடர்ச்சி: பக்கம் 14

பஹ்ரைனில் மூத்த ஷியா மதகுருவுக்கு ஆயுள் தண்டனை



ஈரானுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்ட மதத் தலைவர்களை இலக்காகக் கொண்ட ஒரு விரிவான வழக்கில், பஹ்ரைன் தனது மிக மூத்த ஷியா மதகுருவான ஷேக் ஈசா காசிமுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

ஒரு பயங்கரவாத அமைப்பை உருவாக்கியதாகவும், அரசாங்கத்தைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட 60 ஷியா மதகுருக்கள் மற்றும் ஒன்பது கூட்டாளிகள் உட்பட 69 பிரதிவாதிகள் சம்பந்தப்பட்ட ஒரு கூட்டு விசாரணையைத் தொடர்ந்து இன்றைய தீர்ப்பு வந்துள்ளது. 2016-ல் தனது குடியுரிமை பறிக்கப்பட்ட பிறகு பல ஆண்டுகளாக பஹ்ரைனுக்கு வெளியே வசித்து வந்த காசிமுக்கு, மற்ற முக்கிய மதத் தலைவர்களுடன் அவர் இல்லாத நிலையில் தண்டனை விதிக்கப்பட்டது.

சித்திரவதை, கட்டாய வாக்குமூலங்கள் மற்றும் ஷியா மத நடவடிக்கைகளைக்

தொடர்ச்சி: பக்கம் 16

பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிக்குள் கியூபா



கியூபா ஒரு பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்து வருகிறது; அங்கு அரசு நிறுவனங்கள் கிட்டத்தட்ட முழுமையாகச் செயலிழந்துள்ளன. கியூபாவில் பயணம் மேற்கொண்ட 'தி அட்லாண்டிக்' (The Atlantic) இதழின் பத்திரிகையாளர் ராபர்ட் வொர்த், ஆள் அரவமற்ற நகரங்கள், கைவிடப்பட்ட கட்டிடங்கள், அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுகள் மற்றும் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றைக் கண்டறிந்தார்.

மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களின் சராசரி மாத ஊதியம் 10 டாலருக்கும் குறைவாகவே உள்ளது; அதே சமயம், ஒரு அட்டைப் பெட்டி முட்டையின் விலை சுமார் 7 டாலராக உள்ளது. அரசின் உணவு விநியோக அமைப்பு நடைமுறையில் செயல்படவில்லை; சில வங்கிகளில் ஒரு நாளைக்கு 1.5 டாலருக்கும் குறைவான தொகையை மட்டுமே ரொக்கமாக எடுக்க அனுமதிக்கப்படுகிறது. தலைநகர் ஹவானாவிற்கு வெளியே நிலைமை இன்னும் மோசமாக உள்ளது; அங்கு அடிப்படை

தொடர்ச்சி: பக்கம் 16

மலையகத்தில் தரிசு நிலங்களைத் தனியாருக்கு வழங்கும் அரசின் திட்டத்திற்கு எதிர்ப்புகள் வலுக்கின்றன



மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்திய பின்னரே பெருந்தோட்டக் கம்பனிகளுடன் புதிய குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடு என்று அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தாமல் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்வது பொருத்த மற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சம்பள நிர்ணய சபையின் ஊடாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, வர்த்தமானி அறிவித்தல் மூலம் 200 ரூபாய் சம்பள உயர்வு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலி யுறுத்தியுள்ளார்.

மலையக மக்களுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல், பெருந்தோட்டத் தொழில்துறைக்காக ஒதுக்கப்பட்ட 13,000 மில்லியன் ரூபாய் நிதியை மலையக மக்களுக்காக ஒதுக்கியதாகக் கூறுவது தவறானது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆட்சிக்கு வருவதற்காகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதைப் புரிந்துகொள்ள முடியும் என்றாலும், ஆட்சியை நடத்துவதற்காகப் பொய்யான தகவல்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த அவர், அப்பாவி மலையக மக்களை ஏமாற்றுவோருக்குத் தலையில் இடி விழும் என்றும் எச்சரித்துள்ளார்.

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் புதிய குத்தகை ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளதாகவும், இது தொடர்பில் தகுந்த யோசனைகளை முன்வைத்துக் கலந்துரையாடித் தீர்மானங்களை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச்சஸ் குடியிருப்புக் காணி வழங்கப்பட வேண்டும் என்றும், தோட்டத்தில் பணியாற்று பவர்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் இந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத் தியுள்ளார்.

திருமணமான ஒவ்வொரு தம்பதியினரும் தனிக் குடும்பமாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கொள்கைப் பிரகடனத்திலும், 2023ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஹட்டன் பிர கடனத்திலும் பயிரிடப்படாத தரிசு நிலங்களைத் தோட்ட இளை ஞர்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததாகச் சுட்டிக்காட்டிய அவர், இதுவரை அவ்வாறான காணிகள் வழங்கப் படவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால், தனியார் கம்பனிகளுக்குக் காணிகளைப் பகிர்ந் தளிப்பது எந்த வகையில் நியாயமானது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் தரிசு நிலங்களாக உள்ள காணிகளை முதலீட்டு நோக்கத்துக்காகத் தனியார் நிறுவனங் களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது.

குறித்த நடவடிக்கைக்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் சூழலில், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் கருத்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்டக் காணிகளைப் பெருந்தோட் டக் கம்பனிகளுக்கு மீண்டும் குத்தகைக்குக் கொடுக்கும் விடயத்தில் அரசாங்கம் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க முடியாது என்றும், தொழிற்சங்கங்களான தங்களுடனும் கலந்துரையாட வேண்டும் என்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான காணிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தரிசு நிலங்கள் மலையக இளை ஞர்களுக்குத் தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்குச் சாதகமான முறையில் குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, மலையக மக்களுக்கு முறையான காணி உரிமையை உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தி, ஹட்டனில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்திற்கான மலையக அமைப்புகளின் ஏற்பாட்டில், ஹட்டன் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் நடைபெற்ற இப்போராட்டத்தில், மலையக மக்களுக்கு இதுவரை முறையான

தொடர்ச்சி: பக்கம் 08

ஆசிரியர் தலையங்கம் | 21 நவம்பர், 2026

38வது மாவீரர் நாளில் இறைமையின் மீளுறுதியே அவர்கள் கனவென்பதால் அதனை நனவாக்க சில சிந்தனைகள்

இன்று 21.11.2026 இல் வெளிவரும் இலக்கு மின்னிதழும் தாயகத்திலும் அனைத்துலகிலும் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஆரம்பமாகியுள்ள மாவீரர் வாரத்தில் இணைவதுடன் மாவீரர்களுக்கான வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்நேரத்தில் அனைத்துலகத்துக்கு நல்ல பெயரைக் காட்டுவதற்கு ஒரு அறிக்கையும் மறுபுறத்தில் நினைவுகூரலைத் தடுப்பதற்கு விசாரணைகளையும் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தாயகப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொண்டு வருகிற உண்மையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.

வரிச்சீருடையுள்ள அல்லது சிறிலங்கா அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட அடையாளங்களைக் கொண்ட புகைப்படங்கள் எதற்காவது இவர் அஞ்சலி செய்தாரா என இவரை 20.11.2026 இல் கொழும்பில் இருந்து வந்த கட்டளையின் கீழ் பொலிசார் ஒன்றரை மணி நேரம் விசாரணை செய்துள்ளனர்.

10.10.2026 தமிழீழ மகளிர் நாள் அன்றும் இவரை சிறிலங்காப் பொலிசார் இவ்வாறு விசாரணை செய்துள்ளனர். தியாக தீபம் திலீபனின் வெண்கலச் சிலையை அகற்றிய விடயத்திலும் இவரை பொலிசார் விசாரணை செய்துள்ளனர்.

மாற்றம், நல்லிணக்கம் என்றெல்லாம் வாய்கிழியப் பேசுகின்ற சிறிலங்கா ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்காவின் அரசாங்கம் வீரச்சாவடைந்தவர்களை நினைவேந்தல் செய்வதைக் கூட அனுமதியாத சிங்கள பௌத்த பேரினவாத அரசாகவே செயலளவிலேயே செயற்படுகின்றது என்பதே உண்மை.

இவ்வாறு இன்றும் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் தொடர்ந்து வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள், அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மறுக்கப்படுவதை உலகெங்கும் உலகத் தமிழினமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள மக்களுக்கும் ஊடகங்களுக்கும் தமது நகராட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு எடுத்துச் சொல்லி, அனைத்துலக மக்களின் கவனத்தைச் சிறிலங்காவில் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே ஈழத்தமிழர்கள் உள்ளனர் என்பதை அவர்கள் உணரச் செய்ய வேண்டும் என்பது இலக்கின் இம்மாவீர வார அழைப்பாகவுள்ளது.

இந்த ஈழத்தமிழர் மேலான இனஅழிப்பு நோக்கிலான சிறிலங்காவின் இனஅழிப்பு, இனத்துடைப்பு, பண்பாட்டு இனஅழிப்பு செயற்பாடுகளிலிருந்து இருந்து தங்களின் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கவே மாவீரர்கள் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்து வீரச்சாவினை அடைந்தனர் என்ற வரலாற்று உண்மை உலகிற்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களால் பலமாக எடுத்துரைக்கப்பட வேண்டும்.

அத்துடன் ஈழத்தமிழர்களின் உள்ளகத் தன்னாட்சி உரிமை சிறிலங்காவால் அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிராக மறுக்கப்பட்டு வருவதால் அவர்களது வெளியகத் தன்னாட்சி உரிமையைக் கொண்டு உலக மக்களிடமும் உலக நாடுகளிடமும் தாங்கள் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் வகையில் தங்களுடைய தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்க வேண்டும் என்பது இலக்கின் இந்த மாவீர வார அடுத்த கருத்தாகவுள்ளது.

உலகில் உரையாடல்கள் மூலமான அரசியல் பேச்சுக்கள் வழியில்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பது, உலக வரலாற்றிலேயே முதன் முதலாக சீனாவில் ஷென் ஸென் நகரில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு 2026இன் நிகழ்ச்சி நிரலுக்கு வெளியே உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறை பன்முகத்தன்மை கொண்டதாக இன்று மாறிவிட்டது என்ற உண்மையை வெளிப்படுத்தும் வகையில் சீன ஜனாதிபதி ஸி ஜின் பிங், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆகியோர் இடையே நடைபெற்ற முத்தரப்பு உச்சிமாநாடு உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால் சிறிலங்காவின் அநுரகுமார திசநாயக்காவோ ஈழத்தமிழர்களுடைய தேசியப் பிரச்சினையான பிரித்தானிய காலனித்துவ அரசிடம் 1796 முதல் 1948 வரை இருந்த தங்களின் இறைமையை மீளவும் உறுதிப்படுத்தல் என்பது குறித்த எந்தவொரு உரையாடலையும் தொடங்க மனதில்லாது, மாறாகத் தமது படைபலத்தின் வழி இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி ஈழத்தமிழர்களின் அரசியல் பணிவைப் பெற 70 ஆண்டுகளாக முயன்று வரும் அதே பாணியிலேயே செயற்படுவதை உலகிற்குத் தெளிவாக்கும் பொறுப்பு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கு உள்ளது என்பதை இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

கடந்த வாரத்தில் யேர்மனியின் பிரபலமான ஊடகவியலாளர் Klaus Brinkbäumer பிரித்தானியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் 20.11.2026 இல் இடம்பெற்ற உச்சிமாநாட்டில்,

01. இளையவர்களுக்கு பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் கல்வி, வேலைவாய்ப்புகளுக்கான விசா அனுமதி; 02. பிரித்தானிய, ஐரோப்பிய உணவுப் பொருள்களுக்கு சோதனைத் தடைகள் நீக்கம்;
03. காபனீரொட்சைடு வெளியேற்றத்தைக் குறித்த அளவில் கட்டுப்படுத்திக் காலநிலைச் சீர்கேட்டைக் குறைத்தல்

என்பனவற்றில் இருதரப்பினருக்கும் இடையில் பொதுத்தன்மை அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து மகிழ்வுடன் “பிரிக்சிட்டைத் தந்தீர்கள் - பின்னர் பிரிகிறீட் எனக் கவலைப்பட்டீர்கள்; தயவுசெய்து பிரிரிவேர்ஸ் என மீளவும் பின்னோக்கி வாருங்கள்; பிரிரிட்டேன் எனத் தயவுசெய்து மீளவும் முற்றாகத் திரும்பி வாருங்கள்” (You gave us Brexit, then Bregret; can we please let Breverse lead to Breturn?) என அழைப்பு விடுத்தார்.

இந்த நிலைக்கான, அதாவது பிரித்தானியா மீளவும் ஐரோப்பிய ஒன்றியத்துள் திரும்பவும் இணைவதற்கான முதற்படியாக இந்த மூன்று விடயங்களிலும் ஏற்பட்ட இணைப்பைக் கருதும் ஆய்வாளர்கள், பிரித்தானியப் பிரதமர் அன்ரி பேர்ணன் அவர்களின் சிரித்துச் சிரித்துப் பேசி விடயத்தை வெற்றி-வெற்றி என்ற வகையில் இருதரப்பினருக்கும் இடையில் முன்னெடுக்கும் ஆற்றல் எனவும் விமர்சித்துள்ளனர்.

இதனைப் பிரித்தானியப் பிரதமர் பல எதிர்ப்புக்களுக்கு இடையில் முன்னெடுப்பதற்கான காரணம், 32 வயதுக்கு உட்பட்ட ஜென்சி இளைய தலைமுறையினரின் ஆங்கிலத்தில் NEET (No Education, Employment, Training) கல்வியில்லா நிலை, வேலையில்லா நிலை, பயிற்சிகள் இல்லா நிலை ஆகியவற்றை 2030க்குள் அரை வாசியாகக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே.

பிரிக்சிட் நடந்த 2016 முதல் இன்றைக்கு மட்டுமான பத்தாண்டுகளுள் உலகம் எங்கோ சென்றுவிட்டது என்பது பிரதமரின் கருத்து; அதற்கேற்ப மாற்றத்தைக் கொண்டுவர முயல்கின்றார். இதனை இலங்கையின் அரசியல்வாதிகளும் கவனத்தில் எடுத்து, ஆயுதப் போராட்டம் மௌனித்து 17 ஆண்டுகள் சென்றுவிட்டன.

அதற்கேற்ப காலத்துக்கு ஏற்ற செயற்திட்டங்களை வகுக்க வேண்டுமென்பதை வலியுறுத்து வதற்காகவே, அதிலும் குறிப்பாக ஈழத்தமிழரின் ஜென்சி பரம்பரையினர் உள்வாங்கப்பட்டு அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்ட அரசியல் முறைமையொன்றை உருவாக்கி இதனைச் செய்தல் வேண்டும் என்பது இலக்கின் எண்ணம்.

அவ்வாறே யேர்மனியின் அழைப்பின் பேரில் பிரித்தானியாவையும் இணைத்த ஐரோப்பிய நாடுகளின் அமைப்பான “விருப்பின் கூட்டாண்மை” என்ற உக்ரேனுக்கு உதவும் விருப்புடைய நாடுகளின் தலைவர்களின் கூட்டமும் யேர்மனியில் நடைபெற்றது.

இதில் பிரான்சின் அதிபர் மக்ரோன் உக்ரேனுக்கான நேட்டோ குறித்துப் பேசியுள்ளார். இதில் அமெரிக்க அதிபரின் மருமகனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவையெல்லாம் காலத்துக்கு ஏற்ப செயற்படல் என்பது இன்றைய உலக அரசியலாக உள்ளதென்பதை உறுதியாக்குகின்றன.

இந்நிலையில் ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதி செய்வதில் விருப்புள்ளவர்களின் கூட்டாண்மை ஒன்றை ஈழத்தமிழர்கள் தங்களிடையுள்ள விருப்பு வெறுப்புகளை அனுமதித்த நிலையில், இந்தப் பொதுவிருப்பில் இணைதல் என்ற நிலையில் உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்தல் வழியாகவே மாவீரர்களின் கனவுகள் நனவாக முடியும்.

ஆசிரியர்



தமிழர் இறைவன் கரிகாலன்!

- கவிபாஸ்கர்

தலைவன் பிறந்தான்...
தலைவன் பிறந்தான்
தமிழினம் எழுந்ததடா!! -
எங்கள்
புலிக்கொடி பறந்து...
புலிக்கொடி பறந்து...
புரட்சியும் வெடித்ததடா!

தலைவன் பிறந்தான்..
தலைவன் பிறந்தான்..
தலைமுறை நிமிர்ந்தடா! -
தமிழ்த்
தேசம் பிறந்து.. தேசம் பிறந்து
விடுதலை திறக்குமடா!

எங்க.. குல சாமியின்
பிறந்த நாளிது..
எங்க தமிழ்ப் பூமியே
சிறந்த நாடிது..

எழுபத்து இரண்டை எட்டும்
எங்கள் தலைவனே.. பார்
எட்டுத் திக்கும் வணங்குது..
நீங்க இறைவனே..

ஆதி இனம் எங்களுக்கு
பெருமை இருக்குது
எங்க பிரபாகரன் பேர
சொன்னா
வலிமை பிறக்குது..

வீதியெல்லாம் தமிழர் கொடி
உயர்ந்து பறக்குது!
எங்க வீரமகன் பிறந்தநாளில்
எழுந்து நடக்குது!

முப்பாட்டன் முருகன் தானே
வேலெடுத்து காக்க வந்தான்..
எம்பாட்டன் சோழன் தானே
வாளெடுத்து நாட்ட
வென்றான்..

முருகனையும் சோழனையும்
சேத்து வச்சு பாக்குறோம் -
எங்க
கரிகாலன்.. பிரபாகரன்
பிறந்ததாலே.. வாழ்கிறோம்!

தலைவன் பிரபாகரன்
பேருக்குள்ளே
எரியுதடா நெருப்பு.. அவன்
தமிழர்களை காக்க நிற்கும்
எங்க சாமி கருப்பு!



எப்.பி.ஐ. வருகையின் பின்னணி – சீனாவின் குற்றக் கும்பல்களா?

விதுரன்

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பணியகமான எப்.பி.ஐ. அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு மீண்டும் விசேட விசாரணைகளுக்காக வருகை தந்திருப் பது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய கவனத்தை ஈர்த்துள்ளது. ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர் பான விசாரணைகளுக்குப் பின்னர் குறித்த குழு இலங்கைக்கு வருகை தரும் இரண்டாவது சந்தர்ப்பமாகும்.



அமெரிக்காவின் நோர்த் கரோலினா மாநிலத்தின் சார்லோட் களப் பணியகத்தைச் சேர்ந்த எப்.பி.ஐ.யின் விசேட நிபுணர்கள் குழுவொன்று கடந்த வாரம் கொழும்புக்கு வருகை தந்து, இலங்கைப் புலனாய்வாளர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளது.

இதனை வெறுமே அமெரிக்காவின் சாதாரண இருதரப்பு ஒத்துழைப்பாக அன்றி, இலங்கையை மையமா கக் கொண்டு இயங்கும் நாடுகடந்த இணையவழி மோசடி வலையமைப்புகளை வேரறுக்கும் ஒரு தீர்க்கமான நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கை அதிகாரிகளின் அழைப்பின் பேரிலேயே இந்தக் குழு கொழும்புக்கு வருகை தந்திருந்தாலும், இந்தக் குழுவின் விசாரணைப் பரப்பு அமெரிக்காவின் தேசிய மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பிற்கு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது.

ஒருபுறம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் நெருக்கடிகளுக்கு இலங்கை முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சூழலில், மறுபுறம் தென்கிழக்காசிய நாடுகளான கம்போடியா, மியன்மார் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் விசாரணைகள் இறுக்கமடைந்ததைத் தொடர்ந்து, அங்கிருந்து வெளி யேறிய நாடுகடந்த இணையவழி மோசடிக் கும்பல்கள் இலங்கையைத் தமது புதிய கேந்திர நிலையமாக மாற்றியுள்ளன.

கடந்த சில மாதங்களுக்குள் மாத்திரம் சுமார் 1,100-க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் சீனப் பிரஜைகள் என்பதுடன், வியட்நாம், இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் மடகாஸ்கர் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குகின்றனர்.

கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு, இராஜகிரிய மற்றும் கரையோர சுற்றுலாப் பிரதேசங்களான ஹிக் கடுவை, அளுத்கம, கல்பிட்டி, மிதிகம, தலல்ல உள்ளிட்ட பல இடங்களில் சொகுசு விடுதிகளையும் பலமாடிக் கட்டடங் களையும் பல மில்லியன் ரூபா வாடகைக்குப் பெற்று, வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழில்நுட்பப் பணியாளர்களின் உதவியுடன் இவர்கள் பாரிய சைபர் மோசடி நிலையங்களை நடத்தி வந்துள்ளனர்.

இந்த மோசடிக் கும்பல்கள் இலங்கையைத் தமது பாதுகாப்பான புகலிடமாகப் பயன்படுத்திய போதிலும், இவர்களின் பிரதான இலக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பொதுமக்களாகவே இருந்துள்ளனர்.

இலங்கையில் உள்ளூர் மக்களை இலக்கு வைத் தால் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால், அவர்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய குடிமக்களைக் குறிவைத்துச் செயற்பட்டுள்ளனர்.

குறிப்பாக, காதல் வலையில் வீழ்த்தி நம்பிக் கையை ஏற்படுத்திய பின்னர் முதலீடுகளைப் பெற்று ஏமாற்றும் 'பிக் புட்சரிங்' மோசடிகள், போலி பங்குச்சந்தை மற்றும் கிரிப்டோகரன்சி முதலீட்டுச் செயலிகள் ஊடாகப் பல பில்லியன் டொலர்களை இக்கும்பல்கள் கொள்ளை யடித்துள்ளன.

நீர்கொழும்பு மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது, பெண்களைக் காதல் வலையில் வீழ்த்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகள், போலி அடையாள அட்டைகள், வெளிநாட்டு வங்கிக் கணக்கு விபரங்கள் மற்றும் 'பைனான்ஸ்' ஊடாக நிதியை கிரிப்டோகரன்சியாக மாற்றிய தடயங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியிலேயே அமெரிக்காவின் எப். பி.ஐ. அமைப்பின் சார்லோட் களப் பணியகம் இலங்கையில் குறித்த வலையமைப்பை இலக்கு வைத்து நேரடியாகக் களமிறங்கியுள்ளது.

அமெரிக்கா முழுவதும் 55 களப் பணியகங்களைக் கொண்டுள்ள எப்.பி.ஐ., வெளிநாடுகளில் இருந்து நடத்தப் படும் இணையவழி மோசடிகளை விசாரிக்கும்போது, எந்தப் பணியகத்தின் அதிகார வரம்பிற்குள் அதிகமான அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களோ அல்லது எந்த அலுவலகத்தில் முதல் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்த அலுவலகத்திடமே சர்வதேச விசாரணைப் பொறுப்பை ஒப்படைக்கும்.

அமெரிக்காவின் இரண்டாவது மிகப்பெரிய வங்கி மற்றும் நிதி மையமாக விளங்கும் சார்லோட் நகரில் பாரிய வங்கிகளின் தலைமையகங்கள் அமைந்துள்ளன.

இலங்கையிலிருந்து இயங்கும் மோசடி மையங்க ளால் நோர்த் கரோலினா மாநிலத்தைச் சேர்ந்த அமெரிக்கக் குடிமக்களும் அங்குள்ள வங்கிகளும் பாரிய நிதி இழப்புகளைச் சந்தித்தமையாலேயே, பாரிய நிதி மோசடிகள் மற்றும் வங்கிப் பரிமாற்றங்களைக் கண்காணிப்பதில் நிபுணத்துவம் பெற்ற சார்லோட் பணியகம் இப்பொறுப்பை ஏற்றுள்ளது.

இது குறித்து அமெரிக்கத் தூதுவர் எரிக் மேயர் வெளியிட்ட அறிக்கையிலும், வெளிநாடுகளில் இயங்கும் குற்றக் கும்பல்கள் பல பில்லியன் டொலர்களைத் திருடி வருவதாகவும், அமெரிக்கக் குடிமக்களை நிதிச் சுரண்டலில் இருந்து பாதுகாக்கவும், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் சர்வதேசச் சட்ட அமுலாக்கப் பங்காளிகளுடன்



இணைந்து தொடர்ந்து செயற்படுவோம் எனவும் திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறத்தில், இலங்கைப் பொலிஸாரின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த சைபர் மோசடிகளை முறியடிப்பதில் பாரிய கட்டமைப்பு, வளப்பற்றாக்குறை மற்றும் சட்ட ரீதியான சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.

ஒவ்வொரு சுற்றிவளைப்பின் போதும் சுமார் 200-க்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் கைப்பற்றப்படுகின்றன. ஆனால், அவை அனைத்தையும் பகுப்பாய்வு செய்வதற்கான போதிய தொழில்நுட்ப வளங்களோ, அரச இரசாயனப் பகுப்பாய் வாளர் திணைக்களத்தின் விரைவான ஒத்துழைப்போ இலங்கை அதிகாரிகளிடம் இல்லை.

கைப்பற்றப்படும் கருவிகளில் உள்ள தரவுகளைப் பிரித்தெடுப்பதற்கான மென்பொருள் உரிமங்களும்



மனித உரிமை மற்றும் தனியுரிமைக் காரணங்களால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், சீன மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளுக்கான மொழிபெயர்ப்பாளர்களுக் குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதால், சந்தேகநபர்க ளிடம் வாக்குமூலங்களைப் பெறுவதிலும் பாரிய தாமதம் ஏற்படுகிறது.

மேலும், சுற்றிவளைப்புகளின் போது மெய்நிகர் சேவையகங்கள் தொலைவிலிருந்து அணைக்கப்படுவதா லும், கடவுச்சொற்கள் வழங்கப்படாததாலும் தடயங்களைத் திரட்டுவது கடினமாகிறது.

சட்ட ரீதியான சிக்கல்களும் விசாரணைகளுக்குப் பெரும் தடையாக உள்ளன. 2007 ஆம் ஆண்டின் கணினி குற்றச் சட்டம் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படுவதில் உள்ள சட்ட வியாக்கியானச் சிக்கல்கள் காரணமாக, இதுவரை ஒரு சைபர் மோசடி வழக்கைக் கூட நீதிமன்றத்தில் நிரூபித்துத் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

மாறாக, கைது செய்யப்படும் வெளிநாட்டவர்கள் விசா விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழ் நாடு கடத்தப்படுவதுடன் மட்டுமே நடவடிக்கைகள் முடிவுக்கு வருகின்றன.

இராஜகிரிய போன்ற இடங்களில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜை களிடம் பொலிஸ் அதிகாரிகளே இலஞ்சம் பெற்று கடவுச் சீட்டுகளை விடுவித்த குற்றச்சாட்டுகளும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய பலவீனங்களை நிவர்த்தி செய்யும் முகமாகவே, எப்.பி.ஐ. அதிகாரிகள் இலங்கைப் புலனாய் வாளர்களுக்கு டிஜிட்டல் தடயவியல், புலனாய்வு நுட்பங்கள், பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிதல் மற்றும் வலுவான வழக்குகளைக் கட்டமைக்கும் முறைமைகள் குறித்து ஆழமான பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

அத்துடன், சுற்றிவளைப்புகளில் கைப்பற்றப்பட்ட சில முக்கிய இலத்திரனியல் கருவிகளை மேலதிகப் பகுப்பாய்வுக்காக தாய்லாந்திலுள்ள எப்.பி.ஐ. மற்றும் ரோயல் தாய் பொலிஸ் கூட்டு மையத்திற்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இது வெறுமனே ஒரு வார காலப் பயணத்துடன் நின்றுவிடாமல், இலங்கை அதிகாரிகளின் புலனாய்வுத்

தொடர்ச்சி: பக்கம் 16



மாவீரர் நாள் கார்த்திகை 27

பா.அரியநேத்திரன்

“மாவீரர் நாள் கார்த்திகை 27” என்பது உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற நாள். அது ஈழ விடுதலைப் போரின் ஈகம், வீரம் வெளிப்படுத்திய உன்னத நாள்.

1982 கார்த்திகை 27இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது போராளியான யாழ்ப்பாணம் வடமராட்சி கம்பர்மலையைச் சேர்ந்த செல்வச்சந்திரன் சத்தியநாதன் எனும் இயற்பெயரையும், சங்கர் என்ற இயக்கப் பெயரையும் கொண்ட மாவீரன் வீரச்சாவைத் தழுவிய நாளே மாவீரர் நாளாகும்.



அவர் வீரச்சாவைத் தழுவி சரியாக ஏழு வருடங்கள் கடந்த நிலையில், இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் இடம்பெற்ற காலத்தில்தான் முதலாவது மாவீரர் நாள் 1989 கார்த்திகை 27 அன்று வன்னி நிலப்பரப்பின் அடர்ந்த காட்டுப் பகுதியில் தமிழீழத் தேசியத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

முதலாவது விடுதலைப் புலிகளின் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்களின் வீரச்சாவு நாளான “கார்த்திகை 27”ஐ மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உரையாற்றினார். 1989இல் 1307 மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவியிருந்தனர்.

அந்த முதலாவது மாவீரர் நாள் உரையில் தலைவர் வே. பிரபாகரன் கூறியது:

“எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த்தியாகம் செய்த 1307 போராளிகளை நினைவுகூரும் முகமாக இந்த மாவீரர் நாளை முதல் முறையாக இன்று ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படைவீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படைவீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச் சாவடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களை அனுஷ்டிப்பது வழக்கம்.

ஆனால், 1989இல் இந்த வருடத்திலிருந்து வீரச்சாவடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவுகூர்ந்து அந்த நாளையே ‘மாவீரர் நாள்’ ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவடைந்த ‘சங்கரின்’ நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப் படுத்தியுள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள், இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் எனும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை நாம் நினைவுகூர முடிவு செய்துள்ளோம்.” என அந்த உரையில் தேசியத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

1989 கார்த்திகை 27 தொடக்கம் 2008 கார்த்திகை 27 வரை விடுதலைப் புலிகளின் தலைவர் 20 மாவீரர் தினங்களில் பிரதான சுடர் ஏற்றி மாவீரர் தின உரை நிகழ்த்தியுள்ளார்.

2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்த பின்னர், 2009 கார்த்திகை 27 தொடக்கம் எதிர்வரும் 2026 கார்த்திகை 27 வரை 17 வருடங்களாக மாவீரர் நாள் வணக்கம் தலைவரின் உரையின்றி பொதுமக்களாலும், முன்னாள் போராளிகளாலும், உணர்வுள்ள தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்களாலும் வடகிழக்கில் உள்ள இராணுவம் இல்லாத துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் தொடர்ச்சியாக மாவீரர் நாள் எழுச்சியாகச் செய்யப்பட்டு வருகின்றது.

அதேபோல் புலம்பெயர் தேசங்கள், மத்திய கிழக்கு நாடுகள், தமிழ்நாடு உட்பட உலகத் தமிழர்கள் வாழும் இடமெல்லாம் தொடர்ச்சியாக மாவீரர்களை நினைவுகூர்ந்து இந்த நாள் இடம்பெற்று வருகிறது.

வடகிழக்கில் 2008 வரை 27 துயிலும் இல்லங்கள் இருந்தபோதும், இறுதியுத்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 06 துயிலும் இல்லங்கள் புதிதாக ஏற்படுத்தி, மொத்தமாக 34 துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

துயிலும் இல்லங்களில் விதைக்கப்படாமல் கரும் புலிகளாகக் கடல், தரைகளில் வீரகாவியமான மாவீரர்களின் கல்லறைகளும் துயிலும் இல்லங்களில் நினைவுக் கற்களாக நடப்பட்டும் இருந்தன.

2006 ஜூலை 26இல் திருகோணமலை மாவட்டத்தில் மாவிலையாற்றில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் தொடங்கி, 2009 மே 18 வரை வடக்கு, கிழக்கில் இருந்த அனைத்து துயிலும் இல்லங்களில் இருந்த கல்லறைகளையும் இராணுவத்தினர் உடைத்து சேதமாக்கியதுடன், துயிலும் இல்லங்களில் படை முகாம்களாகச் சில துயிலும் இல்லங்களில் இராணுவம் இப்போதும் நிலைகொண்டுள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களின் விவரம்:

- **வடமாகாணத்தில் துயிலும் இல்லங்கள்:**
- **விசுவமடு – 2728 கல்லறைகள்.**
- **முள்ளியவளை – 2575 கல்லறைகள்.**
- **கிளிநொச்சி – 1963 கல்லறைகள்.**
- **வன்னிவிளாங்குளம் – 856 கல்லறைகள்.**
- **ஆலங்குளம் – 663 கல்லறைகள்.**
- **முழங்காவில் – 959 கல்லறைகள்.**
- **ஆட்காட்டிவெளி – 660 கல்லறைகள்.**
- **பண்டிவிரிச்சான் – 272 கல்லறைகள்.**
- **அளம்பில் – 147 கல்லறைகள்.**
- **உடுத்துறை – 214 கல்லறைகள்.**
- **கோப்பாய் – 1832 கல்லறைகள்.**
- **சாட்டி – 154 கல்லறைகள்.**
- **கொடிகாமம் – 968 கல்லறைகள்.**
- **எள்ளங்குளம் – 795 கல்லறைகள்.**
- **ஈச்சங்குளம் – 707 கல்லறைகள்.**
- **மணலாறு – 81 கல்லறைகள்.**
- **டடிமுகாம் – 90 கல்லறைகள்.**
- **கிழக்கு மாகாணத்துத் துயிலும் இல்லங்கள்:**
- **தரவை – 2452 கல்லறைகள்.**
- **தாண்டியடி – 485 கல்லறைகள்.**
- **வாகரை கண்டலடி – 284 கல்லறைகள்.**
- **மாவடி முன்மாரி – 62 கல்லறைகள்.**
- **கஞ்சிகுடிச்சாறு – 686 கல்லறைகள்.**
- **ஆலங்குளம் – 262 கல்லறைகள்.**
- **பெரியகுளம் – 65 கல்லறைகள்.**
- **தியாகவனம் – 35 கல்லறைகள்.**

இந்த 26 துயிலும் இல்லங்களின் கல்லறைகள் விவரம் 2005 நவம்பரில் விடுதலைப் புலிகள் மாவீரர் பணிமனையால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. மொத்தம் இருபதாயிரம் (20,000) கல்லறைகள் விவரம் அந்தக் குறிப்பில் காணப்பட்டன.



அதன்பின்னர் மேலதிகமாக இறுதிப்போர் வரையும் 08 துயிலும் இல்லங்கள் இருந்தன.

அவை:
சுதந்திரபுரம்,
தேவிபுரம்,
இரணைப்பாலை,
ஆனந்தபுரம்,
இரட்டைவாய்க்கால்,
முள்ளிவாய்க்கால் கிழக்கு,
மணலாறு கோடலிக்கல்.

மொத்தம் 34 துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டன.

2006 தொடக்கம் 2009 மே 18 வரை துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்ட மாவீரர்கள் எண்ணிக்கை (கல்லறைகள்) தொடர்பான விவரம் கிடைக்கவில்லை.

கடந்த 17 ஆண்டுகளாகத் துயிலும் இல்லங்களில் நினைவுகள் படையினரின் கெடுபிடிகள் மத்தியிலேயே செய்யப்பட்ட வரலாறே காணப்பட்டது.

நீதிமன்றத் தடை உத்தரவுகள் மஞ்சள், சிவப்புக் கொடிகளைக் கட்டவிடாமல் தடுக்க ஏற்பட்டன.

ஆனால், அந்தத் தடைகள், இராணுவ அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் அவைகளுக்கு முகங்கொடுத்து துயிலும் இல்லங்களில் நினைவுச் சுடர்கள் கார்த்திகை 27ஆம் நாள் மாலை 06.05 மணிக்கு ஏற்றப்பட்டதே வரலாறு.

எதிர்வரும் 2026 நவம்பர் 27 (கார்த்திகை 27) வழமைபோன்று உணர்வுபூர்வமாக மக்கள் திரண்டு சகல துயிலும் இல்லங்களிலும் மண்ணிற்காய் உயிர்நீத்த மாவீரர்களுக்குத் தீபம் ஏற்றி வணங்குவார்கள்.

தேசியத் தலைவர் இறுதி மாவீரர் நாளான 2008 கார்த்திகை 27இல் அவர் கூறிய இறுதிப் பகுதி:

“தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில்வளர்ந்தாலும்எமதுதேசவிடுதலைக்குஉறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப்

தொடர்ச்சி: பக்கம் 15



தமிழ்த் தேசிய அரசியலில் சிலர் பதவிகளால் நினைவில் துருத்துகிறார்கள். சிலர் அவர்கள் ஆற்றிய உரைகளால் அடையாளம் பெறுகிறார்கள். இன்னும் சிலர் எந்தச் சூழலிலும் களத்தை விட்டு விலகாமல் நின்று செய்த அரிய செயல்களால் நினைவில் நிலைத்திருக்கிறார்கள். மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் இந்த மூன்றாவது வகையைச்சேர்ந்தஅரசியல்தலைவர்.நாடாளுமன்றத்திலும் மாகாண சபையிலும் அரசியல் கட்சிகளிலும் பயணித்த அவர், இறுதிவரை போராட்டக் களங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளிலும் போர்க்குணம் மிக்க போராளியாக நின்றார் என்பது சிவாஜிலிங்கத்தின் ஆகச்சிறந்த அடையாளம். அவரது மரணம் ஒரு அரசியல் தலைமைத்துவத்தில் பெரிய வெற்றிடத்தைத் தந்திருக்கிறது.



அரசியல் பயணம்

1957 ஆகஸ்ட் 15ஆம் திகதி வல்வெட்டித்துறையில் பிறந்த சிவாஜிலிங்கம், தனது அரசியல் பயணத்தை தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவில் ஆரம்பித்தார். பின்னர் அந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பையும் வகித்தார். 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் பங்கேற்ற அவர், 2001 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். 2013ஆம் ஆண்டு வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்று மாகாண சபை உறுப்பினரானார். 2010 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிட்டார். 2024ஆம் ஆண்டு பொதுத் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனை முன்னிறுத்திய அரசியல் முயற்சியிலும் முக்கிய பங்காற்றினார். இறுதியாக வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராகப் பணியாற்றினார்.



அவரது அரசியல் பயணத்தில் அதிகம் பேசப்பட வேண்டிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பக்கமுண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் பெற்றோருடன் கொண்டிருந்த உறவு. போர் முடிவடைந்த பின்னர் தலைவர் பிரபாகரனின் பெற்றோர் இராணுவக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தனர். 2010 ஜனவரியில் பனாகொடை இராணுவ முகாமில் இருந்தபோது தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளை உயிரிழந்தார். அவரது உடலைப் பொறுப்பேற்று வல்வெட்டித்துறைக்குக் கொண்டு சென்று இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கான பொறுப்பைச் சிவாஜிலிங்கம் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து பார்வதி அம்மையாரின் பராமரிப்பிலும் அக்கறை செலுத்தினார். அவரைச் சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டார். 2011 பெப்ரவரியில் பார்வதி அம்மையார் காலமானபோது, அவரது இறுதிச் சடங்குகளையும் குடும்பத்தின் சார்பில் முன்னின்று நடத்தினார். அரசியல் உறவுகளையும் தாண்டி, ஒரு குடும்பத்தின் துயரமான இறுதிக் காலத்தில் பொறுப்பேற்ற இந்தச் செயற்பாடு அவரது வாழ்வின் தனித்துவமான அத்தியாயமாகும்.

நினைவேந்தலுக்கான போராட்டம்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னர் சிவாஜி லிங்கத்தின் அரசியல் செயற்பாடுகளில் நினைவேந்தல் ஒரு தொடர்ச்சியான பணியாக மாறியது. எந்த நெருக்கடி நிலையிலும் ஒரு வாழைக்குற்றியுடன் தனியாகச் சென்று சுடர்களை ஏற்றி நினைவேந்தல்களை நடத்தினார். 2010ஆம் ஆண்டிலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு களை முன்னெடுப்பதில் அவர் ஈடுபட்டார்.



தடைகள், பொலிஸ் விசாரணைகள், நீதிமன்ற உத்தரவுகள்,கைதுநடவடிக்கைகள்எனப்பலநெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் நினைவேந்தல் நிகழ்வுகளிலிருந்து அவர் பின்வாங்கவில்லை. முள்ளிவாய்க்கால் மட்டுமன்றி செஞ்சோலை, நவாலி, திலீபன் நினைவேந்தல் உள்ளிட்ட பல்வேறு வரலாற்று நினைவிடங்களிலும் அவரது பங்கேற்பு தொடர்ந்தது. 2020ஆம் ஆண்டு திலீபன் நினைவேந்தல் தொடர்பாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. 2024ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் அந்த வழக்கிலிருந்து அவரை விடுவித்தது.



இனப்படுகொலைத் தீர்மானக் காரணகர்த்தா

2014ஆம் ஆண்டு வடமாகாண சபையில் இனப்படுகொலை தொடர்பானதீர்மானத்தைமுன்மொழிந்ததும்சிவாஜிலிங்கம் அவர்களின் அரசியல் பயணத்தில் முக்கியமான நிகழ்வாகும். 2014 ஜனவரி 27ஆம் திகதி முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் ஆரம்ப வடிவத்தில் இனப்படுகொலை என்ற சொல்லாடல் இடம்பெற்றிருந்தது. பின்னர் முதல மைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தலையீட்டில் அது 'இனப்படுகொலைக்கு ஒப்பானது' என்ற சொற்றொடராக மாற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வரலாற்று அநீதிகள், மனித உரிமை மீறல்கள், திட்டமிட்ட படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை

தீபச்செல்வன்

நடத்தப்பட வேண்டும் என்பதே அந்தத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதன் பின்னர் ஜெனீவாவுக்குச் சென்று சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையையும் அவர் வலியுறுத்தினார்.



சிவாஜிலிங்கம்முன்வைத்தமற்றொருமுக்கியமான அரசியல் கோரிக்கை பொதுசன வாக்கெடுப்பாகும். 2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில், தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க சர்வதேச ஏற்பாட்டிலான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைனுக்கு எழுதிய கடிதத்திலும், இலங்கை நிரந்தரமான அரசியல் தீர்வை வழங்கத் தவறினால் ஐ.நா. கண்காணிப்பிலான பொதுவாக்கெடுப்பை நடத்த சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்று கோரினார். 2018ஆம் ஆண்டு வடமாகாண சபை நிறைவேற்றிய பொதுவாக்கெடுப்புத் தொடர்பான தீர்மானமும் இந்த அரசியல் கோரிக்கையின் தொடர்ச்சியாக அமைந்தது. 2026ஆம் ஆண்டிலும் வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக இருந்து அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, சர்வதேச விசாரணை, பொதுவாக்கெடுப்பு ஆகிய கோரிக்கைகளை மீண்டும் முன்வைத்தார்.



கொள்கைப் பற்றாளன்

அரசியல் மேடைகளில் மட்டும் நின்றுவிடாமல், மக்கள் போராடிய இடங்களுக்குச் சென்று அவர்களுடன் நின்றது அவரது செயற்பாட்டு அரசியலின் தனித்துவ அடையாளமாக இருந்தது. சிவாஜிலிங்கத்தின் அரசியல் பயணத்தில் தமிழர் அரசியல் உரிமை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை, பொதுவாக்கெடுப்பு ஆகிய விடயங்களில் அவர் மிகவும் உறுதியாக விட்டுக்கொடுப்பற்ற கொள்கை யில் வாழ்ந்தார். அத்துடன் அதற்காகப் பல எதிர்ப்புகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்ட அவர், கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டும் சிக்கல் களை எதிர்கொண்டார். தமிழ்த் தேசியத்தை மிகவும் நேசத்து டன் பற்றிக்கொண்டு அதற்காக வாழ்வதில் சிவாஜிலிங்கம் உறுதியுடன் பல தியாகங்களைச் செய்தார் என்பது அவரது தனித்த வரலாறாகும்.

தொடர்ச்சி: பக்கம் 15



சுதந்திரமாகத் தீர்மானிக்கும் திறனாளி சிவாஜிலிங்கம் அண்ணன்

சுரேஸ் – *மன்னார்*

அவரிடமிருந்த போராடும் குணம் அவரைத் தீவிரமாக இயக்கியது. மனிதநேயம் அதற்கு அரண் செய்தது.

சிவாஜிலிங்கம் அண்ணன் தனது இளமைக்காலம் முதல் கொண்டு, உயிரை அச்சுறுத்தும் நோய் ஆட் கொள்ளும் வரை, தமிழர் உரிமை அரசியலில் தன்னை வெளிப்படுத்தியவை ஒவ்வொன்றும் பிரமிப்பானவை.



தனியொருவராகவும், அமைப்பு ரீதியாகவும், கட்சி ரீதியாகவும், அணியாகவும் எனப் பல தளங்களில் அவரது வீச்சான அரசியல் அடையாளமிட்டுக் காட்டக்கூடியது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பாக எழுந்த சவால்கள், ஆபத்துகளின் போதெல்லாம், எதிர்த்து ஓங்கி எழுகின்ற முன்வரிசைக் குரல்களில் இவரது குரலும் ஒன்று. அத்தோடு, நன்மை தரும் ஏற்பாடுகளை வரவேற்றும் ஆதரித்தும் எழுகின்ற முதல் குரலாகவும் அவரை முன்நிறுத்திப் பார்க்கலாம்.



எதுவாயினும், தனது தீர்மானிக்கும் திறனில் தனக்குள்ள சுதந்திரத்தை முழுமையாகப் பிரகடனப்படுத்தி வாழ்ந்தவர்; அதற்காக உழைத்தவர்.

இவரது மருத்துவத் தேவையில் தாயகத்திலிருந்தும் புலம்பெயர் தேசத்திலிருந்தும் அதிகமான தமிழ்மக்கள் விசேட குணப்படுத்தல் ஆராதனைகளும் செப வேண்டுதல் களும் மேற்கொண்டிருந்தனர். அது இவர் மீதான தமிழ்



மக்களின் பரிவன்பை எடுத்துக்காட்டியது.

இவரது சிகிச்சைக்காக உதவிடத் தனித்தும், அமைப்பு ரீதியாகவும் ஏராளமானோர் முன்வந்தனர். நேரில்



சென்று ஆதரவளித்தமையும், பலரதும் அன்பைப் பெற்ற நம்பிக்கையாளன் என்பதற்குச் சான்றாக அமைந்தன.



இவருக்குக் கிடைத்த ஆதரவு நிதியிலிருந்து, தன்னைப்போலப் பாதிப்புற்ற இன்னொருவருக்கும் பகிர்ந்து கொடுத்தமை இவரது மனிதாபிமான இயல்பின் இன்னுமொரு வெளிப்பாடாகும்.

உள்ளூர் மன்றங்களிலும், மாகாண சபையிலும், பாராளுமன்றத்திலும் எதுவாயினும் சரி, அவர் எழுப்பும் குரலின் தொனியில் ஒரே வேகம் அமைந்திருக்கும்.

எல்லா வார்த்தைகளும் பொருள் கொண்டவை. அவை எல்லாமும் சபையேறுவதுமில்லை. அதற்கு அவசிய முமில்லை. எல்லாப் பூக்களும் தெய்வ சன்னதிக்கு வந்து விடுவதில்லை போன்ற இயற்கையின் நியதியை ஒத்தவை.

மரங்கள் பூத்துக்கொண்டே இருப்பது போல, சிவாஜிலிங்கம் அண்ணன் பேசி, குரல்கொடுத்துக் கொண்டே இருந்தார்.



பிறர் விருப்புக்குரியவை எவை,விரும்பத்தகாதவை எவை,விடுதலைக்கானவை எவை என்பதை அனுமானிப்பது அவரவர் கையிலுள்ள அளவுகோலின் பாற்பட்டது.

முரண்பட்டு முரண்பட்டே பண்பாடும் வரலாறும் வளர்ந்திருக்கின்றன; வளர்கின்றன. அவரால் தமிழர் அரசி யல் அரங்கம் அதிர்ந்தது உண்மை.

இயல்பாகவே எவருக்கெல்லாம், எதற்கெல்லாம் கோபம் எழுந்ததோ, அவற்றைச் சிவாஜிலிங்கம் அண்ணன் பொறுப்பேற்று தனது கோபமாகக் கொப்பளித்தார்.

சாமானிய மக்களோடு அவருடைய வாழ்க்கை அமைந்திருந்தது. சாமானிய மக்களின் வாழ்க்கையோடு பொருந்திய அரசியலாக அவரது அரசியல் இருந்தது.

தமிழகத் தலைவர்களிடத்தில் சகோதரத்துவ உறவினை அரசியல் உறவாகப் பரிணமிக்கச் செய்து, அதன் தொடர்ச்சியை மிகக் கண்ணியமாகக் கையாண்டவர்.

வேலுப்பிள்ளை ஐயாவையோ பார்வதி அம்மா வையோ ஞாபகத்தில் கொண்டுவரும்போது, அவரது மனிதாபிமானம் கலந்த போராட்டப் பணியானது ஆபத்தில் உதவிய உற்ற நண்பனாக நினைவுகளில் அவரை உயர்த்தியது.

சிவாஜிலிங்கம் அண்ணனிடம் போராடும் குணம் இருந்தது. மனிதாபிமான இயல்பு அதற்கு அரண் செய்தது. தனக்குள்ள சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி நம் சமூகத்திற்காக உழைத்துத் தேய்ந்தார்.

தன்னைச் சுற்றியுள்ள தன்மக்களுக்கு வெற்றித் தலைவனாகவே தேர்ந்தெடுக்கும் தகுதியான பாத்திரத்தைத் தக்கவைத்தவர் அவர். காலம் அவரை அழைத்து..... ஓர் இனம்புரியாத வெற்றிடத்தைத் தந்திருக்கிறதா?

• • •

மலையகத்தில் தரிசு ... தொடர்ச்சி...

காணி உரிமை வழங்கப்படாமையினால் அவர்கள் பல்வேறு சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

மலையக மக்கள் இன்றும் சொந்த முகவரி யற்றவர்களாகவும், காணியற்றவர்களாகவும், சொந்த வீடுகளற்றவர்களாகவும் வாழ்ந்து வருவதால், ஏனைய சமூகத்தினருக்குக் கிடைக்கும் பல்வேறு உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்வதில் சிரமங் களை எதிர் கொள்வதாகப் பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையி லான தற்போதைய அரசாங்கம், மலையக மக்களுக்குக் காணி உரிமையை வழங்குவதாக உறுதியளித்தே ஆட்சிக்கு வந்ததாகவும், ஆனால் இதுவரை அந்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மலையகப் பகுதிகளில் சுமார் 41 ஆயிரம் ஹெக்டேர் பயிரிடப்படாத தரிசு நிலங்கள் காணப்படுவ தாகவும், அவற்றை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் நீண்டகாலமாக நிலவிவரும் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மக்களுக்குக் காணிகளை வழங்குவதற்குப் பதிலாக, தனியார் துறையினருக்குக் காணிகளை வழங்கு வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

எனவே, மலையக மக்களுக்கு உடனடியாகக் காணி உரிமையை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு தவறினால் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

ரோஹிங்கியாக்களுக்கு ... தொடர்ச்சி...

குறிப்பிட்ட சில சம்பவங்களைக் குறிப்பிட்ட அவர், மியான்மர் "இனப்படுகொலை நோக்கத்துடன்" செயல்பட்டதாகத் தெரிவித்தார். மேற்கு ஆப்பிரிக்க நாடான காம்பியா, 2019-ஆம் ஆண்டில் இந்த வழக்கைத் தொடர்ந்தது. ரோஹிங்கியா இனத்தையே அழிக்கும் நோக்கத்தில் மியான்மர் செயல்படுவதாக காம்பியா குற்றம் சாட்டியிருந்தது. 1948-ஆம் ஆண்டின் இனப்படுகொலை தடுப்பு உடன்படிக்கையை மியான் மர் மீறியுள்ளதாக அறிவிக்க வேண்டும் என்றும், ரோஹிங்கியாக்களை இலக்காகக் கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்த உத்தரவிட வேண்டும் என்றும், இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் தண்டிக் கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் சர்வதேச நீதிமன்றத்திடம் காம்பியா கோரியிருந்தது.



நகரமயமாக்கலின் விளைவாக ஏற்படும் மிக முக்கிய மான சவால்களில் ஒன்று திண்மக்கழிவு முகா மைத்துவமாகும். முறையான திட்டமிடல் இன்றி கழிவுக ளைக் கொட்டுவது சுற்றுச்சூழலைப் பாதிப்பதுடன், பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, ஏறாவூர் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நிலவும் நீண்டகாலக் குப்பைமேடு பிரச்சினையைக் குறிப்பிடலாம். ஏறாவூர் நகர சபையின் பிரதி தவிசாளர் ஞானச்சிறம் கஜேந்திரன் முன்வைத்த தகவல்களின் அடிப்படையில், இப்பிரச்சினையின் தீவிரத்தையும், அத னால் ஏற்படும் பாதிப்புகளையும், அதனைத் தீர்ப்பதில் நிலவும் நிர்வாக மற்றும் அரசியல் முரண்பாடுகளையும் ஆராய்வோம்.



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர சபையின் பத்து வட்டாரங்களிலிருந்தும் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள், முறையான மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாமலும் பாதுகாப்பான நிலப்பரப்புகளுக்கு அனுப்பப்படாமலும், வாவிக் கரையோரங்கள், சதுப்பு நிலங்கள், தனியார் வயல் காணிகள் மற்றும் ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மதுமலர்க்கை வீரபுத்திர சுவாமி ஆலயம் உள்ளிட்ட நான்கு ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்றன.

செங்கலடி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், இப்பகுதிகளில் மாமி சக் கழிவுகள் கொட்டப்படுவதில்லை என்றும், இதனால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் நகர சபைத் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பிரதி தவிசாளர் மேற்கொண்ட நேரடிக் கள விஜயத் தின்போது உண்மை நிலை வெளிச்சத்திற்கு வந்தது. உழவு இயந்திரங்கள் மற்றும் டிப்பர் லொறிகள் மூலம் கொண்டுவரப்பட்ட திண்மக் கழிவுகளுடன் மாட்டு இறைச் சித் தலைகள், எலும்புகள் மற்றும் கோழிக் கழிவுகள் போன்ற மாமிசக் கழிவுகளும் கலந்து கொட்டப்படுவதை அவர் காணொளி ஆதாரங்களுடன் பதிவு செய்தார். இந்தக் கள ஆய்வின்போது, நகர சபையின் திண்மக் கழிவுப் பொறுப்பு மேற்பார்வையாளரால் அவர் தடுக்கப்பட்டுத் தாக்கப்பட்டதுடன், அவரது கைத்தொலைபேசியைப் பறிக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது கழிவு அகற்றலில் நடைபெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளை மூடிமறைக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

சுற்றுச்சூழல், வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரப் பாதிப்புகள்

வாவிக் கரையோரங்களிலும் சதுப்பு நிலங்களிலும் குப்பைகள் கொட்டப்படுவதால், அப்பகுதியின் சூழலியல் சமநிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இப்பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரங்களில் ஒன்றான மீன்பிடித் தொழில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கழிவுகளிலிருந்து வெளியேறும் இரசாயனப் பதார்த்தங்களும் அழுகிய மாமிசக் கழிவுகளும் வாவி நீரில் கலப்பதால் நீர் மாசடைகின்றது.



இவ்வாறு மாசடைந்த நீரில் வாழும் மீன்கள் அக்கழிவுகளை உண்பதால், அவற்றை உட்கொள்ளும் பொதுமக்களுக்குப் புற்றுநோய் உள்ளிட்ட பாரிய சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, இப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்களை உள்ளூர் மக்கள் வாங்குவதற்குத் தயங்குகின்றனர். இதனால், பல மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து, தொழிலையே கைவிடும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் குப்பைகள் கொட்டப்படுவதால் ஏற்படும் துர்நாற்றமும் சுகாதாரச் சீர்கேடும் மாணவர்களினதும் பக்தர்களினதும் அன்றாட நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, ஏறாவூர் நகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஆதரவு வழங்கப்பட்டபோது, ஐந்து முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் முதலாவதும் மிக முக்கியமானதுமான கோரிக்கை, இந்தக் குப்பைமேடு பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பதாகும். 2025 மார்கழி மாதத்திற்குள்ளும், பின்னர் சித்திரை மாதத்திற்குள்ளும் வாவிக் கரையோரங்களில் குப்பை கொட்டுவதை நிறுத்தி, மண்ணால் மூடிச் சுத்தப்படுத்திய பின்னர், கழிவுகளைப் பிரித்து ஏறாவூர் பற்று கொடுவாமடு திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்புவ தாகத் தவிசாளரால் வாக்குறுதியளிக்கப்பட்டது.

மட்டு.நகரான்

ஆனால், ஓராண்டு கடந்த பின்னரும் அவ்வாக் குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பாக ஆளுநரிடமும், ஜனாதிபதி செயலகத்தின் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்ட அதிகாரிகளிடமும் எழுத்துமூலமான முறைப் பாடுகள் முன்வைக்கப்பட்டன. மேலும், ஜூன் 18ஆம் தேதி நடைபெற்ற நகர சபையின் 13ஆவது அமர்வில் இது தொடர்பான பிரேரணையைப் பிரதி தவிசாளர் முன்வைத்தபோது, சக உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அதுமட்டுமன்றி, அவருக்கு வழங்கப் பட்டிருந்த அலுவலக அறையும் அதிகாரங்களும் பறிக்கப் பட்டதுடன், உயிர் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டுள்ளன.

பல்லின, பல்தரப்பட்ட சமூகங்கள் ஒன்றிணைந்து வாழும் பிரதேசங்களில், நிர்வாகக் குறைபாடுகளையும் அதிகாரப் போட்டிகளையும் சிலர் இனரீதியான அல்லது அரசியல்ரீதியான முரண்பாடுகளாகத் திரிபுபடுத்தும் போக்கு கவலையளிக்கிறது. ஏறாவூர் நகர சபையில் நிலவும் திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரச்சினையும், அத னைத் தொடர்ந்து எழுந்துள்ள சர்ச்சைகளும் இத்தகைய சூழலைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. பொதுநலன், சுகாதாரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை முன்னிறுத்தி அணுக வேண்டிய ஒரு நிர்வாகப் பிரச்சினை, சில தரப்பினரின் செயற்பாடுகளால் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் விரிசலை உருவாக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.



ஏறாவூர் வாழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக நின்று, தமது அடிப்படை உரிமைகளுக்கும் சுகாதாரத்திற்கும் குரல் கொடுப்பது அவசியமாகும். அரசியல் மற்றும் இன ரீதியான பிரிவினைகளை விடுத்து, பொதுநலனையும் சமூக ஒற்றுமையையும் பாதுகாப்பதன் மூலமே விரிசல்களை உருவாக்க முயலும் சக்திகளை முறியடித்து, சுத்தமானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

அபிவிருத்தி என்பது வீதிகளையும் வடிகால் களையும் அமைப்பது மட்டுமல்ல; மக்களின் அடிப்படைச் சுகாதாரத்தையும் பாதுகாப்பான சூழலையும் உறுதிப்படுத்து வதுமாகும். மக்கள் பிரதிநிதிகள் தமது சுயநலன்களையும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளையும் கடந்து, ஏறாவூர் மக்களின் நலன் கருதி ஒன்றிணைய வேண்டும். வாவிக் கரையோரங்களில் சட்டவிரோதமாகக் குப்பை கொட்டுவதை உடனடியாக நிறுத்தி, முறையான கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சம்பந்தப் பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

• • •



ஈழஒளி

எம். கே. சிவாஜிலிங்கத்தின் மறைவு ஈழத் தமிழ் இனத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இது ஒரு மூத்த அரசியல் தலைவரை இழந்தது என்பதோடு மட்டுமல்லாமல், ஈழத் தமிழர்களின் தேசிய அபிலாஷைகள், வரலாற்றுத் துயரங்கள், கூட்டு எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் தங்கள் சுதந்திரம், கண்ணியம் மற்றும் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான அவர்களின் தளராத உறுதிப்பாடு ஆகியவற்றுடன் ஆழமாகப் பிணைக்கப்பட்ட ஒரு மனிதரை நாம் இழந்துள்ளோம் என்பதையும் குறிக்கிறது. தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் சர்வதேச அளவில் புறக்கணிக்கப்பட்டும், இராஜதந்திர சமரசங்களுக்கு உள்ளாக்கப்பட்டும், இலங்கை அரசால் தமிழர்களின் தேசியப் போராட்டத்தின் அரசியல் அடித்தளத்தையே அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வந்த சூழலில், தமிழ் தேசியத்தின் நியாயத்தன்மையையும், ஈழத் தமிழர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் வரலாற்று உரிமையையும் நிலைநாட்டும் ஒரு முக்கிய குரலாக எம். கே. சிவாஜிலிங்கம் திகழ்ந்தார்.



எம். கே. சிவாஜிலிங்கத்தைப் பொறுத்தவரை, 'தமிழ் ஈழம்' என்பது வெறும் புவியியல் சார்ந்த சொல்லோ அல்லது மக்கள் திரள் நிகழ்வுகளின் போது பயன்படுத்தப்படும் அரசியல் முழக்கமோ மட்டுமல்ல; அது ஒரு மக்களின் தாயகம். அந்த மக்களின் தனித்துவமான தேசிய அடையாளம், வரலாற்று இருப்பு மற்றும் அரசியல் அபிலாஷைகளை இராணுவ ஆக்கிரமிப்பு, அரசியல மைப்பு ரீதியான ஒதுக்குதல் அல்லது தமிழர்களின் அரசியல் வெளிப்பாடுகளை முறையாக ஒடுக்குதல் ஆகியவற்றின் மூலம் அழித்துவிட முடியாது. எனவே, அவரது முக்கியத்துவத்தை வழக்கமான அரசியல் வெற்றி அளவுகோல்களைக் கொண்டு மட்டும் மதிப்பிட முடியாது. ஏனெனில், அவர் வகித்த பதவிகள் அல்லது பணியாற்றிய நிறுவனங்களுக்குள் அவரது பங்களிப்பு சுருங்கிவிடவில்லை; மாறாக, இலங்கை அரசாங்கங்கள் ஒவ்வொன்றாலும் சட்டவிரோதமானவை அல்லது செல்லாதவை என்று முத்திரை குத்தப்பட முயன்ற அரசியல் கோரிக்கைகளைத் துணிச்சலுடன் முன்வைத்ததில் அவரது பங்களிப்பு அடங்கியுள்ளது.

தமது அரசியல் வாழ்வு முழுவதும், ஈழத் தமிழர்களின் எதிர்காலம் இலங்கை அரசின் அரசியல் நலன்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத தமிழ் தேசிய மரபை எம். கே. சிவாஜிலிங்கம் பிரதிநிதித்துவப்படுத்தினார். தமிழ் தேசியப் பிரச்சினை என்பது நிர்வாக அதிகாரங்கள், பொருளாதார வளர்ச்சி அல்லது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தொடர்பான ஒரு சாதாரண விவகாரம் மட்டுமல்ல; அது தேசியம், கூட்டு உரிமைகள், நிலப்பரப்பு அடையாளம் மற்றும் அரசியல் சுயநிர்ணயம் தொடர்பான ஒரு அடிப்படை விவகாரம் என்பதை அவரது அரசியல் கொள்கைகள் உணர்த்தின. ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனப் படுகொலையை — குறிப்பாக அது மிக மோசமான உச்சத்தை எட்டிய 2009-ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகளை — அரசியல் நினைவுகளிலிருந்து அழித்துவிடவோ அல்லது இலங்கை அரசு முன்னிறுத்தும் 'இராணுவ வெற்றி' என்ற பிம்பத்திற்குள் சுருக்கிவிடவோ அனுமதிக்க மறுத்தது, எம். கே. சிவாஜிலிங்கத்தின் அரசியல் மரபில் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தின் இராணுவத் தோல்வியைக் கொண்டாடியும், தமிழர்களின் அழிவை 'தேசிய ஒற்றுமைக்கான சாதனையாகச் சித்தரிக்க முயன்றும் வந்த தொடர்ச்சியான இலங்கை அரசாங்கங்களுக்கு மத்தியில், ஈழத் தமிழர்களின் துயரம் மௌனத்தால் மறைக்கப்படக் கூடாது என்றும், அதற்கு மாறாக அது நினைவுகூரப்பட வேண்டும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் எம். கே. சிவாஜிலிங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இந்த நிலைப்பாட்டின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற முடியாது. குறிப்பாக, கட்டாயக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் இன்றும் பதில்களைத் தேடிக்கொண்டிருக்கும் சூழலிலும், தமிழ் மக்கள் இராணுவமயமாக்கல் மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றின் விளைவுகளைத் தொடர்ந்து எதிர்கொண்டு வரும் நிலையிலும்,சர்வதேச அளவில்இழைக்கப்பட்டகடுமையான குற்றங்களுக்கு நம்பகமான பொறுப்புக்கூறல் இல்லாதது ஈழத் தமிழ் இனம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அநீதிகளில் ஒன்றாக நீடிக்கும் சூழலிலும், இந்த நிலைப்பாடு மிக முக்கியமானது. இத்தகைய சூழலில், நினைவுகூரலுக்கான உரிமை என்பது ஒரு மக்களின் அரசியல் அடையாளத்தைப் பாதுகாப்பதோடு பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது. ஏனெனில், தங்கள் இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை மறுக்கப்படும் ஒரு மக்கள், தங்களின் கூட்டுத் துயரம் குறித்த வரலாற்று உண்மையை நிலைநிறுத்தும் உரிமையையும் இழக்க நேரிடுகிறது.



எம். கே. சிவாஜிலிங்கம், நினைவுகூரல் என்பது வெறும் சடங்கு சார்ந்த கடமை மட்டுமல்ல, அது அரசியல் கண்ணியத்தின் மற்றும் தேசியத் தொடர்ச்சியின் வெளிப்பாடு என்பதை நன்கு உணர்ந்திருந்தார். முள்ளி வாய்க்கால் மற்றும் தியாக தீபம் திலீபன் தொடர்பான நிகழ்வுகள் உட்பட, தமிழ் மக்கள் முன்னெடுக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளில் அவர் காட்டிய ஈடுபாடு, ஈழத் தமிழர்களின் வரலாற்று நினைவுகளைக் குற்றமாக்கும் அல்லது ஒடுக்கும் முயற்சிகளை எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. இத்தகைய நினைவேந்தல்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை; ஏனெனில், அவை துன்புறுத்தல், இடம்பெயர்வு மற்றும் அளப்பரிய தனிப்பட்ட தியாகங்களைச் சந்தித்த தலைமுறைகளின் அனுபவங்களைப் பாதுகாப்பதோடு, அந்த அனுபவங்களுக்கான அடிப்படையான அரசியல் சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிட்டதாக, அந்தத் துயரங்களுக்குக் காரணமான அரசு தன்னிச்சையாக அறிவித்துவிட முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

அதேபோல, 'சுயநிர்ணய உரிமை' என்பது தமிழ் ஈழத்தின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது என்பதில் எம். கே. சிவாஜிலிங்கம் உறுதியாக இருந்தார். 'குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' (ICCPR) மற்றும் 'பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' (ICESCR) ஆகியவற்றின் முதலாவது விதிகளின்படி, அனைத்து மக்களுக்கும் தங்கள் அரசியல் நிலையைத் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானித்துக்கொள்ளவும், தங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும் உரிமை உண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுதந்திர அரசு கோரும் உரிமைகளுக்காக இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்துவது சட்டரீதியாக விவாதத்திற்குரியதாக இருந்தாலும், ஈழத் தமிழர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் அர்த்தமுள்ள குரலைக் கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கையை, அது இலங்கையின் தற் போதைய அரசியலமைப்பு மற்றும் பிராந்தியக் கட்டமைப் பிற்குச் சவால் விடுகிறது என்பதற்காக மட்டும் 'தீவிரவாதம்' என்று ஒதுக்கிவிட முடியாது.

இதுவே எம். கே. சிவாஜிலிங்கத்தின் அரசியல் முக்கியத்துவமாகும்: 'நல்லிணக்கம்' என்ற சொல்லை நீதிக்கான மாற்றாக அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே போல், பல தசாப்தங்களாக முறையான பாகுபாட்டையும் வன்முறையையும் அனுபவித்த மக்களின் தேசிய அபிலா ஷைகளை, அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற வாக்குறுதியைக் கொண்டு மழுங்கடிக்க அவர் அனுமதிக் கவில்லை. இராணுவமயமாக்கல், குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கப்படாமை (impunity) மற்றும் அரசு அதிகாரக் கட்டமைப்பு ஆகியவை பெரிய அளவில் மாறாமல் இருக்கும் சூழலில், ஈழத் தமிழர்கள் தங்களின் தேசிய அடையாளத்தைக் கைவிட்டு, அதற்குப் பதிலாகச் சில மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தாக்கத்தை அவரது அரசியல் நிலைப்பாடு கேள்விக்குள்ளாக்கியது.



ஈழத் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்கு — புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளர்ந்தவர்கள் உட்பட — எம். கே. சிவாஜிலிங்கத்தின் அரசியல் மரபு, அவரது மறைவுக் காகத் துயருறுவதைத் தாண்டிய ஒரு பெரும் பொறுப்பை வழங்குகிறது. இனப்படுகொலை, இடம்பெயர்வு மற்றும் வரலாற்று அநீதிகளின் விளைவுகளைச் சுமந்து நிற்கும் ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாம். அதேவேளையில், எமது மக்களின் அரசியல் அபிலாஷைகள், சர்வதேச வசதிக்காக நீர்த்துப்போகாமலோ அல்லது காலப்போக்கில் மறக்கப்பட்டுவிடாமலோ இருப்பதை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எம். கே. சிவாஜிலிங்கத்தின் மறைவு, தமிழ்த் தேசிய உணர்வைப் பேணுவது என்பது, நமது வரலாற்றின் மிக மோசமான காலகட்டங்களுக்கு நேரில் சாட்சியாக இருந்த தலைமுறையை மட்டுமே எப்போதும் சார்ந்திருக்க முடியாது என்பதை நமக்கு உணர்த்துகிறது. மாறாக, அரசியல் கல்வி, கொள்கை சார்ந்த முன்னெடுப்புகள், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் சர்வதேச நீதிக்கான தொடர்ச்சியான கோரிக்கைகள் ஆகியவற்றின் ஊடாக இந்த உணர்வு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக வரலாற்று உண்மைகளை விட்டுக்கொடுக்க மறுத்த எம். கே. சிவாஜிலிங்கத்தின் அரசியல் வாழ்வு, நமக்கு ஒரு முக்கியமான பாடத்தைப் புகட்டுகிறது. ஈழத் தமிழர்கள் அடிக்கடி தங்கள் கருத்துகளை மென்மையாக முன்வைக்குமாறும், தங்கள் தேசியக் கோரிக்கைகளைக் கைவிடுமாறும், அல்லது அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் ஏதுமின்றி வெறும் அடையாள ரீதியான நல்லிணக்கச் சைகைகளை ஏற்றுக்கொள்ளுமாறும் தூண்டப்படுகிறார்கள். அரசியல் முன்னேற்றத்திற்கான பொறுப்பு, அநீதி இழைத்த அரசு அதைச் சரிசெய்ய வேண்டும் என்பதில் இல்லை; மாறாக, பாதிக்கப்பட்டவர்கள் விட்டுக்கொடுக்க முன்வர வேண்டும் என்பதில்தான் உள்ளது என்பது போன்ற ஒரு பிழையான

தொடர்ச்சி: பக்கம் 16



செத்தும் கொடுத்தார் சிவாஜிலிங்கம்!

கோபிகை

இலங்கை என்கிற எமது நாட்டில் வடக்கு கிழக்கு இணைந்த எமது நிர்வாகப் பிரிவுகளில் எளிமை, அச்ச மின்மை, கொள்கை மீதான பற்று, சக உறவுகள் மீதான பிடிப்பு இவை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்கியவர்தான் மறைந்த அரசியல் ஆளுமையாளரான மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் அவர்கள்.



ஏனைய மூத்த அரசியல்வாதிகளிலிருந்து இவர் ஏன் வேறுபட்டு மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார் என்றால் அது, அவருடைய மெய்யான குணத்தினாலேயே ஆகும். அதாவது, சுயலாபம் கருதாத அரசியல் செயற்பாடு மக்களுக்காக உண்மையாகச் சேவை செய்ததன் பலன், ஒளிவுமறைவற்ற மனத்திண்மை.

தமிழ் வீர வரலாறு கொண்ட வடமராட்சியின் வல் வெட்டித்துறை மண்ணில் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் திகதி பிறந்த இவர், ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒரு மக்கள் பிரதிநிதியாக வாழ்ந்து மறைந்துள்ளார். அவர் மறைந்துவிட்டாலும் அவருடைய பாதையும் அவர் மேற்கொண்ட பயணத்தையும் எம்மிடம் விட்டுவிட்டே சென்றுள்ளார்.



மூத்த அரசியல் தலைமை எனும் பெயரைத் தன்ன கத்தே கொண்ட இவர், சக்கர நாற்காலியில் இருந்தபடி பாராளுமன்றம் சென்றதும், தனது ஆசனத்திற்குச் சென்று அமர முடியாத நிலையிலும் வெளியே இருந்தபடி உரை யாற்றியதும் சாதாரணமாகக் கடந்து விடக்கூடிய அரசியல் சாணக்கியம் அல்ல. அவர் அன்று ஆற்றிய உரையானது, தமிழர்களின் சுயமரியாதையையும் தளர்ந்துவிடாத மன உறுதியையும் தென்னிலங்கைக்கு எடுத்துக்கூறியது என்றால் மிகையல்ல. அந்த வேளையில், அவருடைய உரையானது சிங்கள மொழியில் இருந்தது.

ஆம்! தென்னிலங்கை அரசியல்வாதிகள் எமது நியாயங்களைப் புரிந்துகொள்ளும் வகையிலேயே தனது உரையை முன்வைத்தார். மாவீரர் தினமாகட்டும், முள்ளி வாய்க்கால் நினைவேந்தலாகட்டும், காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் போராட்டமாகட்டும், அனைத்து தளங்களிலும் தானே முன்னின்று செயற்பட்டு, நீதிமன்றங்கள் தோறும் வழக்குகள் இருந்தபோதும் அஞ்சாநெஞ்சனாக இறுதிவரை இயங்கிக்கொண்டிருந்தார் என்பதை நாம் ஒருநாளும் மறந்துவிடலாகாது.

போர் நடைபெற்ற காலங்களில், அதாவது இர ண்டாயிரத்து ஒன்று, இரண்டாயிரத்து நான்கு ஆகிய காலப்பகுதிகளில்யாழ்ப்பாணமாவட்டத்தின்பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்ற இவர், போருக்குப் பின்னர், அதாவது இரண்டாயிரத்து பதின்மூன்றில் மாகாண சபை உறுப்பினராகவும் வாழும் காலம் வரை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராகவும் பணிசெய்தவர்.



அரசியலில் ஈடுபடுவதென்பது தலைமுறைகள் தாண்டியும் வாழும் அளவுக்குச் சொத்து சேர்ப்பதற்கான களம் என்கிற கருத்து பெருவாரியாகப் பேசப்படுகிற, அல்லது மக்கள் நம்புகின்ற நிலையில், தனக்காகவோ தன் உறவுகளுக்காகவோ எந்தவிதச் சொத்தையும் சேர்க்காது உன்னதமான அரசியல் பணியாற்றிய உத்தமராக நாம் போற்றத்தக்கவர் சிவாஜிலிங்கம் ஐயா.




இவர் மனத்தூய்மையோடு பொதுவாழ்வை வாழ்ந்தவர் என்பதோடு, தனக்குக் கிடைத்த வருமானத்தை யும் வளங்களையும் கூட முள்ளிவாய்க்காலில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கிவிட்டு, எளிமையாக வாழ்ந்த பெருமகன். ஓடிஓடி தன்னால் இயன்றவரை மாவீரர்களினது தியாகத்துக்காகவும் அவர்களின் கனவு களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். “கொழுத்துவம்.... அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொழுத்து வம்” என்று குமுறி முழக்கமிட்ட இவர், அரசியலில் ஈடுபடு பவர்கள் உண்மையான மக்கள் தொண்டர்களாக இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு வாழும் உதாரணமாக எம் மத்தியில் நடமாடியவர்.

அவருடைய மரணச்சடங்கில் திரண்டு நின்ற மக்களின் எண்ணிக்கையே அவருடைய தூய எண்ணங் களுக்கும் துடிப்புமிக்க செயல்களுக்குமான சான்றாகும். மதத் தலைவர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனத் திரளான மக்கள் கூட்டத்தின் மலர் வணக்கத்தோடு இவருடைய அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. தமிழ்நாட்டில்



இருந்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் மற்றும் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ. நெடுமாறன் அவர்களின் செயலாளர் ஆகியோர் வருகை தந்து அந்த இறுதி அஞ்சலி நிகழ்வை இன்னும் கனதிக்குரியதாக ஆக்கியிருந்தனர். இயலாமையிலும் கூட பயணப்பட்டுக்கொண்டே இருந்தவர். அதற்கான காரணமாக அவர் சொன்னது, “நான் போனால்தான் மக்களுக்கு நம்பிக்கை வரும்” என்பதுதான்.

2010 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் கிடைக்காது என்று தெரிந்தும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, அதனையே தமிழர்களின் அரசியல் பொறிமுறையாக சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தி உலகத்தின் கவனத்தை ஈர்த்த இவர், காலம் உள்ளவரை தமிழர்களின் அரசியல் பரப்பில் நீக்கமற நிறைந்த ஒரு மகா மனிதராகப் போற்றப்படுவார் என்பதில் ஐயமில்லை. இவர் வீதிகளில் மட்டுமல்ல, நாடாளுமன்ற அவையில் தனது குரலை உயர்த்தி உரிமைக்குரலாக ஒலித்துக்கொண்டே இருந்தார்.



எம். கே. சிவாஜிலிங்கம் என்பது வெறும் பெயரல்ல, அது ஒரு அடையாளம். இப்படியும் ஒரு அரசியல்வாதி எம் மிடையே வாழ்ந்து மறைந்தார் என்பதை காலங்காலமாக நினைவுகொள்வதற்கான தனிப்பெருமை.

நவம்பர் 14ஆம் திகதி அவர் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் அவருடைய பெயர் என்பது மறக்கப்படாத ஒன்றாகத் தமிழ் மக்களிடையே நிறைந்து வாசம் செய்யும் என்பதே உண்மை. அவரது மகத்துவமான பணிகளில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமானால் கார்த்திகையில் பிரிந்த அவருடைய ஆன்மா நிறைவுகொள்ளும்.



குடியுரிமை பறிப்பிலிருந்து சுயமரியாதை விடுதலை வரை!

மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாகப் பெருந் தோட்டத் துறையைக் கட்டமைத்த மலையகத் தமிழ் மக்கள், கடந்த பல தசாப்தங்களாக வரலாற்று ரீதியான புறக்கணிப்புகள், சட்ட ரீதியான உரிமைப் பறிப்புகள் மற்றும் கட்டமைப்பு சார்ந்த அநீதிகளை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, 1948 நவம்பர் 15ஆம் திகதி அன்று நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டமும், அதனைத் தொடர்ந்து வந்த தேர்தல் திருத்தச் சட்டங்களும் ஒரு சமூகத்தின் அரசியல் இருப்பையும், குடியுரிமையையும், எதிர்காலத்தையும் ஒரே இரவில் கேள்விக்குறியாக்கிய முக்கிய திருப்புமுனைகளாகும்.



வரலாற்றுப் பின்னணியும், உரிமைப் பறிப்புகளின் தொடர்ச்சியும்

1946 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 11.7% (ஏறக்குறைய 7,80,600 பேர்) கொண்ட பெரிய சமூகமாக மலையகத் தமிழ் மக்கள் திகழ்ந்தனர். 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், மொத்தமுள்ள 95 நாடாளுமன்ற ஆசனங்களில் மலையகப் பிரதிநிதிகளாக 7 உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும், சுமார் 20 தேர்தல் தொகுதிகளில் இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக மலையக மக்களின் வாக்குகள் அமைந்தன. மலையக மக்களின் வளர்ந்து வந்த அரசியல் செல்வாக்கைக் கருத்திற் கொண்டு, அப்போதைய ஆளும் தரப்பினர் 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தையும், 1949 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தையும் நிறைவேற்றினர்.

இதன் விளைவாக, பெருமளவிலான மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டு, வாக்குரிமையை இழந்தனர். இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட தருணத்தில், அப்போதைய அரசியல் தலைமைகளின் நிலைப்பாடுகள் மற்றும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் செயல்பாடுகள் குறித்து வரலாற்று ஆய்வாளர்களிடையே பல்வேறு விமர்சனங்களும் ஆய்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் காரண மாக, 1952 ஆம் ஆண்டு தேர்தலில் மலையக மக்களால் நேரடியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியாத நிலை உருவானது. இதன் விளைவாக 1964–1974 சிறிமா–சாஸ்திரி மற்றும் சிறிமா–இந்திரா ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

நாடாளுமன்றத்தில் மலையக மக்களுக்கான நேரடிப் பிரதிநிதித்துவம் இல்லாத சூழலில், இந்தியா மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே 1964 ஆம் ஆண்டு சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தமும் 1974 ஆம் ஆண்டு சிறிமா–இந்திரா ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப் பந்தங்களின் அடிப்படையில், சுமார் 6 இலட்சம் பேருக்கு இந்தியக் குடியுரிமையும், 3.75 இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. குடியுரிமை மற்றும் தாயகம் தொடர்பான இந்தத் தீர்மானங்களால் பல குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. பலர் நீண்ட காலம் நாடற்றவர் களாகவே வாழ்ந்தனர்.

1980களில் இனவழிப்பு

1970களின்முற்பகுதியில்நிலவியகடுமையானபொருளாதார நெருக்கடிகள் மற்றும் உணவுப் பற்றாக்குறையின் போது, தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொண்டனர். 1970கள் மற்றும் 1980களில் உருவான தீவிர அரசியல் மற்றும் இனவாத சூழல்களில், மலையகத் தமிழர்கள் சில வேளைகளில் சந்தேகத்திற்கும், அரசியல் முத்திரை குத்தல்களுக்கும் ஆளாகினர். 1977 மற்றும் 1983 காலகட்டங்களில் ஏற்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளின் போது, பெருந்தோட்டப் பகுதிகளிலும் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்களும் இடப்பெயர்வுக ளும் நிகழ்ந்தன.

1985–2003: குடியுரிமை மீட்பும் சட்ட ரீதியான மாற்றங்களும்

1985 ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தைகள் மற்றும் தொடர்ச்சியான உள்நாட்டு-சர்வதேச அழுத்தங்களின் பின்னணியில், 1986 ஆம் ஆண்டு சட்டமூலம் சுமார் 94,000 பேருக்குக் குடியுரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டது. 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொண்டு வரப்பட்ட சட்டமூலம், சத்தியக்கடதாசி (Affidavit) அடிப்படையில் குடியுரிமை வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியாக, 2003 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்கும் சட்டத்தின் மூலம் இலங்கையில் வசித்த எஞ்சியிருந்த நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட்டது.



1946 ஆம் ஆண்டின் மக்கள்தொகை விகிதாசாரத்து டன் ஒப்பிடும்போது, உரிமைப் பறிப்புகளும், தாயகம் திரும்புதல்களும், இடப்பெயர்வுகளும் மலையக சமூகத்தில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தின. குறிப்பாக இந்த விடயம் மலையக அரசியல் பிரதிநிதித்துவத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், மக்கள்தொகை விகிதாசாரத்தின் அடிப் படையில் மலையக சமூகத்திற்கு இருந்திருக்கக்கூடிய பிரதிநிதித்துவ வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்தன. அத்துடன் தலைமுறை தலைமுறையாகத் தோட்டங்களில் உழைத்த போதிலும், சொந்த நிலம் மற்றும் வீட்டுரிமை இல்லாத நிலை பரவலாக நீடித்தது. சுயாதீனமான பொருளாதாரத் தளத்தை உருவாக்குவதில் இருந்த தடைகள், தோட்டத் தொழிலையும், குறிப்பிட்ட கட்டமைப்புகளையும் சார்ந்திருக்கும் நிலையை வலுப்படுத்தின.

மலையக மக்களின் வாழ்வியலில் இன்றுவரை தீராத பிரச்சினைகள்

சட்ட ரீதியாகக் குடியுரிமை கிடைத்திருந்தாலும், அன்றாட வாழ்வில் மலையகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சனைகள் பல இன்றும் முழுமையாகத் தீர்க்கப்படாமல் உள்ளன. பல குடும்பங்கள் இன்னும் லயன் அறைகளிலேயே வசிக்கின்றன. தனியான வீடுகள் கட்டப்பட்டாலும், காணிக்கான தனிப்பட்ட உறுதிப்பத்திரம் இல்லாததால், நில உரிமை முழுமையாக உறுதிப்படுத்தப் படாத நிலை உள்ளது. தோட்டப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, போதிய பௌதீக வளங்கள் இன்மை, உயர்கல்விக்கான இடைநிற்றல் விகிதம் போன்ற சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

சுத்தமான குடிநீர், முறையான சுகாதார வசதிகள், மலசலகூட வசதிகள் மற்றும் தோட்டங்களுக்கு இடையி லான போக்குவரத்து வசதிகள் சில பகுதிகளில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ப நிலையானதும் போதுமானதுமான நாளாந்த ஊதியம் தொடர்பான போராட்டங்கள் தொடர்கின்றன. இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்புகள் குறைவாக உள்ளன. பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிர் வாகங்களுக்குள் தோட்டப் பகுதிகளை முழுமையாக உள்வாங்கி, நேரடியான அரச சேவைகளைத் தடையின்றி வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் நீடிக்கின்றன. வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளைப் பதிவு செய்வதும், அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதும் எதிர்காலத் திட்டமிடலுக்கு அவசியமானது.

எனினும் மலையக மக்களின் வாழ்வியலை மேம் படுத்த பல தசாப்தங்கள் கடந்தும் இதுவரையில் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இன்றும் காணி உரிமை, சிறந்த கல்வி, சிறந்த ஊதியம் மற்றும் சிறப்பானசுகாதாரவசதிபோன்றவற்றுக்கானகோரிக்கைகள் நீடித்த வண்ணமே உள்ளன. மலையக மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதாயின் நில உரிமை மற்றும் வீட்டுவசதித் திட்டங்களை வெளிப்படைத்தன்மையுடனும், நிரந்தர உரிமையுடனும் நிறைவேற்றுவது அவசியமாகும். கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்வாய்ப்புகளை விரிவுபடுத்தி, இளைஞர்களுக்குப் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.



கல்வியாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் தேசிய-சர்வதேச நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் நிலையான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை முன்னெடுப்பது இன்றியமையாததாகும். 1948-இல் பறிக்கப்பட்ட உரிமைகளையும், 78 ஆண்டுகால வரலாற்றுப் பாடங்களையும் தாண்டி, மலையகத் தமிழ் சமூகம் இன்று ஒரு முக்கியமான வரலாற்றுத் திருப்பு முனையில் நிற்கிறது. கடந்த காலத் துயரங்களை வெறும் நினைவுகளாக மட்டும் சுமந்து கொண்டிராமல், அவற்றை எதிர்கால எழுச்சிக்கான அடித்தளமாக மாற்றுவதே இன் றைய காலத்தின் கட்டாயமாகும்.

சட்ட ரீதியான குடியுரிமை மட்டுமே ஒரு சமூகத்தின் முழுமையான விடுதலையாகிவிடாது. சொந்த நிலம், தரமான கல்வி, சுயாதீனமான பொருளாதாரம் மற்றும் சமமான சமூக கௌரவம் ஆகியவை உறுதிப்படுத்தப்படும்போது மட்டுமே உண்மையான நீதி நிலைநாட்டப்படும். தலைமுறை தலைமுறையாக இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு வியர்வை சிந்திய ஒரு சமூகம், இனியும் சலுகைகளுக்காகக் காத்திருக்கும் ஒரு பிரிவாக அல்லாமல், தமது தலை விதியைத் தாமே தீர்மானிக்கும் வலிமைமிக்க சக்தியாக உருவெடுக்க வேண்டும். கல்வியாளர்கள், இளைஞர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தூய நோக்கமுடைய தலைமைகள் அனைவரும் ஒரே புள்ளியில் ஒன்றிணைந்து செயற்படும்போது, இருண்ட வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் போட்டு, சுயமரியாதையும் பொருளாதார சுதந்திரமும் கொண்ட புதியதொரு விடியலை மலையக மண்ணில் நிச்சயம் உருவாக்க முடியும்.

• • •



சென்ற வாரத் தொடர்ச்சி (இறுதிப்பாகம்)

தகுதிவாய்ந்த தடயவியல் நோயியல் வல்லுநர்கள், மானுடவியலாளர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், மரபியல் வல்லுநர்கள் மற்றும் சர்வதேச குற்றவியல் விசாரணைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை உள்ளடக்கிய ஒரு பல்துறை விசாரணை செயன்முறைக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்.

அத்தகைய செயன்முறையானது, தொற்றுநோய் மற்றும் இயற்கை பேரழிவு கருதுகோள்களை சுயாதீனமாக ஆராயவும், சாத்தியமான சட்டவிரோத கொலைகளுக்கான ஆதாரங்களை மதிப்பிடவும், மேலும் கண்டறியப்பட்ட முடிவுகள் பொருத்தமான நீதித்துறை நடவடிக்கைகளுக்காகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யவும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.



சர்வதேசப் பங்கேற்பு, ஆதாரங்களுக்கான அர்த்தமுள்ள அணுகல் மற்றும் வெளிப்படையான வழிமுறைகளுடன், சாராம்சமானதாக இருக்க வேண்டும்.

போதுமான சுதந்திரம் அல்லது அணுகல் இல்லாமல் சர்வதேச பார்வையாளர்களை நியமிப்பது மட்டும், அடிப்படைப் பொறுப்புக்கூறல் கவலைகளைத் தீர்க்காது.

உள்நாட்டு நிறுவனங்கள் வழக்குத் தொடரத் தவறிய கடுமையான குற்றங்களைக் கையாள்வதற்கு, மேலும் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் அவசியமா என்பதையும் ஐக்கிய நாடுகள் சபை பரிசீலிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பதில்களுக்காகக் காத்திருக்கும் வேளையில், சர்வதேச நீதி என்பது அறிக்கைகளைத் தயாரிப்பதோடு மட்டும் நின்றுவிட முடியாது.

சர்வதேச நீதி கட்டமைப்புகளின் கீழ் ஆஸ்திரேலியாவின் பொறுப்பு

சர்வதேசச் சட்ட ஒத்துழைப்பு மற்றும் பொறுப்புக்கூறல் கோட்பாடுகளின் மூலமாகவும் ஆஸ்திரேலியாவின் பங்கு ஆராயப்பட வேண்டும்.

ஐ.சி.சி.பி.ஆர் (ICCPR), இனப்படுகொலை மாநாடு மற்றும் ரோம் சட்டம் ஆகியவற்றில் ஒரு தரப்பாக, ஆஸ்திரேலியா அந்தந்த சட்டக் கட்டமைப்புகளுக்குள் சர்வதேசக் கடமைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள், வெளிநாட்டில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் ஒவ்வொரு சர்வதேசக் குற்றத்தையும் ஆஸ்திரேலியா விசாரிக்க வேண்டும் என்று தானாகவே கட்டாயப்படுத்தாவிட்டாலும், பொறுப்புக்கூறல், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கடுமையான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் ஆகியவற்றை ஆதரிப்பதற்கு அவை ஒரு முக்கியமான சட்ட அடிப்படையை வழங்குகின்றன.

1995 ஆம் ஆண்டு காமன்வெல்த் குற்றவியல் சட்டத்தின் 268 ஆம் பிரிவு, தொடர்புடைய அதிகார வரம்பு, கால மற்றும் நடைமுறைத் தேவைகளுக்கு உட்பட்டு, இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றங்களை வரையறுக்கிறது.

எனவே, திறமையான குற்றவியல் விசாரணைகளுக்கு உதவக்கூடிய சான்றுகளைப் பாதுகாப்பதை ஆஸ்திரேலியா ஆதரிக்க வேண்டும், மேலும் நம்பகமான குற்றச்சாட்டுகள் ஆஸ்திரேலிய அதிகார வரம்பிற்குள் வரும் இடங்களில் கிடைக்கக்கூடிய சட்ட வழிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

செல்வி
ரேணுகா இன்பக்குமார்
வழக்கறிஞர்
நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா

இராஜதந்திர ஈடுபாடு மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சபையின் வழிமுறைகள் மூலம் செம்மணியில் சுதந்திரமான சர்வதேச தடயவியல் ஈடுபாட்டிற்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் வாதிட வேண்டும்.

இஸ்ரால்வில் ஈழத் தமிழ் சமூகங்கள் வசிக்கும் நிலையில், அவர்களின் குடும்பங்கள் இடம்பெயர்வு, கட்டாயக் காணாமல் போதல் மற்றும் கூறப்படும் துன்புறுத்தல்களை அனுபவித்திருப்பதால் இது குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கையில் உள்நாட்டு நீதியின் தொடர்ச்சியான தோல்வியை இரண்டாம் நிலை இராஜதந்திர முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகக் கருதும் அதே வேளையில், சர்வதேசப் பொறுப்புக்கூறலுக்கான கொள்கை ரீதியான அர்ப்பணிப்பை ஆஸ்திரேலியா கோர முடியாது.

அடிப்படை மனித உரிமைகளின் பாதுகாப்பு, இருதரப்பு உறவுகளின் அரசியல் வசதியைச் சார்ந்திருக்கக் கூடாது.

செம்மணியில் சர்வதேச சட்ட ஒழுங்கு சோதிக்கப்படுகிறது

செம்மணியின் முக்கியத்துவம், நூற்றுக்கணக்கான நபர்கள் எவ்வாறு ஒரே இடத்தில் புதைக்கப்பட்டனர் என்ற உடனடிக் கேள்விக்கு அப்பாற்பட்டது.

தண்டனையின்மையின் தொடர்ச்சியான விளைவுகளையும், பொறுப்பை நிலைநாட்டத் தேவையான சுதந்திரமோ அதிகாரமோ இல்லாத பொறுப்புக்கூறல் வழிமுறைகளின் வரம்புகளையும் எதிர்கொள்ளுமாறு இது சர்வதேச சமூகத்திற்கு சவால் விடுகிறது.

சர்வதேச சட்டம், சட்டவிரோதமான மரணங்கள், கட்டாயமாகக் காணாமல் போதல், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான ஒரு கட்டமைப்பை ஏற்கனவே வழங்குகிறது.

சர்வதேச குற்றவியல் மற்றும் மனித உரிமைகள் சாசனம் (ICCPR) வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாக்கிறது மற்றும் பயனுள்ள தீர்வுகளைக் கோருகிறது. கட்டாயமாகக் காணாமல் போதல் மீதான சாசனம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உரிமைகளை அங்கீகரிக்கிறது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம், பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கு எதிரான கொலை மற்றும் பிற கடுமையான துஷ்பிரயோகங்களைத் தடை செய்கிறது. சர்வதேச குற்றவியல் சட்டம், தனிநபர் பொறுப்பு, கட்டளைப் பொறுப்பு மற்றும் மிகக் கொடிய குற்றங்களை விசாரித்தல் ஆகியவற்றை நிர்வகிக்கும் கொள்கைகளை வழங்குகிறது.

ஆயினும், இந்தச் சட்டப் பாதுகாப்புகள் திறம்பட அமுல்படுத்தப்படாத போது அவற்றின் நடைமுறை முக்கியத்துவத்தை இழக்கின்றன.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, உள்நாட்டு விசாரணைகளை மீண்டும் மீண்டும் சார்ந்திருப்பது, பல தசாப்தங்களாக நிறைவேறாத எதிர்பார்ப்புகளிலிருந்து பிரிக்க முடியாததாகிவிட்டது.

காணாமல் போனவர்களின் தாய்மார்கள், எந்தவொரு குடும்பமும் பெற உரிமையுள்ள மிக அடிப்படையான தகவலான தங்கள் பிள்ளைகளுக்கும் அன்புக்குரியவர்களுக்கும் என்ன ஆனது என்ற கேள்வியைக் கேட்டு, ஆயிரக்கணக்கான நாட்களாகத் தங்கள் போராட்டங்களைத் தொடர்கின்றனர்.

அந்தப் பதில்களைப் பெறாமலேயே பலர் உயிரிழந்துள்ளனர்.

தடயவியல் சான்றுகள் மீட்கப்பட்டு, அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, சர்வதேச அக்கறை வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்புக்கூறல் மீண்டும் ஒத்திவைக்கப்படும் மற்றொரு அத்தியாயமாக செம்மணி மாறிவிடக் கூடாது.

சமீபத்திய இடைக்கால அறிக்கை, அந்த மரணங்கள் ஒரு தொற்றுநோய் அல்லது இயற்கை பேரழிவின் விளைவாக ஏற்பட்டன என்பதை நிறுவவில்லை. அதுபோலவே, அந்த நபர்கள் சட்டவிரோதக் கொலைகளுக்குப் பலியானார்களா என்பதையும் அது திட்டவட்டமாகத் தீர்மானிக்கவில்லை.

அந்த நிச்சயமற்ற தன்மை, ஊகங்களுக்கான நியாயப்படுத்தலாக அல்லாமல், சுதந்திரமான விசாரணைக்கான ஒரு சட்ட மற்றும் தார்மீகக் கட்டாயத்தை உருவாக்குகிறது.



சர்வதேச சமூகம் தடயவியல் சுதந்திரம், சான்றுகளின் பாதுகாப்பு, குடும்பங்களின் அர்த்தமுள்ள பங்கேற்பு மற்றும் குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான நம்பகமான வழிகளைக் கோர வேண்டும்.

கூறப்படும் குற்றங்கள் பல தசாப்தங்களுக்கு முன்பு நடந்ததால், விசாரணை செய்வதற்கான பொறுப்பு மறைந்துவிடுவதில்லை. அதுபோலவே, உள்நாட்டு நடவடிக்கைகள் இருப்பது, சட்டவிரோத மரணங்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டத் தரங்களைத் தானாகவே பூர்த்தி செய்துவிடாது.

அமைக்கப்பட்ட ஆணையங்களின் எண்ணிக்கை, வெளியிடப்பட்ட அறிக்கைகள் அல்லது வழங்கப்பட்ட இராஜதந்திர உறுதிமொழிகளின் எண்ணிக்கையைக் கொண்டு நீதியை அளவிட முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படுகிறார்களா, உண்மை நிலைநாட்டப்படுகிறதா, மற்றும் நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் தகுதிவாய்ந்த மற்றும் சுதந்திரமான நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படுகிறார்களா என்பதைக் கொண்டே இது அளவிடப்பட வேண்டும்.



செம்மணியில் உள்ள எச்சங்கள் வெறும் தொல் பொருள் கண்டுபிடிப்புகள் அல்ல, அவை மனித உயிர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஒவ்வொரு நபரின் குடும்பத்தினரும் இன்னும் விடைகளுக்காகத் தேடிக்கொண்டிருக்கலாம்; மேலும், கண்டறியப்படும் ஒவ்வொரு விஷயமும் சர்வதேசச் சட்டத்தின் தீவிர மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைக் கொண்டிருக்கக்கூடும்.

மிக நீண்ட காலமாக, முழுமையான நீதியை வழங்குவதில் மீண்டும் மீண்டும் தோல்வியுற்ற உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் வழிமுறைகளின் மீது நம்பிக்கை வைக்குமாறு ஈழத் தமிழர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

சர்வதேச சமூகம் இப்போது, அது முன்வைக்கும் பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி, உண்மைக்கான உரிமை மற்றும் தண்டனையிலிருந்து தப்பிப்பதைத் தடுத்தல் ஆகிய கோட்பாடுகள் தமிழ் தேசத்திற்கும் சமமாகப் பொருந்தும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

தொடர்ச்சி: பக்கம் 16



தமிழீழ மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில், ஞாயிற்றுக் கிழமை (15.11.2026) உலகத் தமிழர் வரலாற்று வளாகத்தில் மாவீரர் குடும்ப மதிப்பளிப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.



இந்த நிகழ்வின்போது பொதுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, பிரித்தானிய மற்றும் தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன. மாவீரர்களின் பெற்றோர்களும் உரித்துடையோர்களும் உலகத் தமிழர் வரலாற்று வளாகத்தின் பண்ணிசை முழங்க அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர்.



மண்டபத்தில் பொதுவான மாவீரர் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.



நிகழ்வின் தொடர்ச்சியாக வரவேற்புரை, வரவேற்பு நடனம், மாவீரர் நினைவு நடனங்கள், மாவீரர்களின் நினைவுப் பகிர்வுகள் மற்றும் மாவீரர் குடும்ப மதிப்பளிப்பு நிகழ்வின் வரலாறு தொடர்பான ஆழமான கருத்துகளுடன் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக, மாவீரர் குடும்பங் களுக்கான நினைவுப் பொருட்களை வழங்குவதற்காகச் செலவிடப்பட வேண்டிய நிதியையும் மேலதிக நிதியையும் சேர்த்து, தாயகத்தில் வாழும் மாவீரர் குடும்பங்களின் நலனைக் காக்கும் நோக்குடன் மாவீரர் பணிமனையால் மக்கள் நலன் காப்பகத்திடம் ஒரு தொகை நிதி கையளிக் கப்பட்டது.



அதேபோன்று, எதிர்வரும் தமிழீழ தேசியக் கொடி நாளை முன்னிட்டு ஏற்றப்படவுள்ள தேசியக் கொடியை நிகழ்வில் கலந்துகொண்ட உறவுகள் அனைவரும் தொட்டு ஆசீர்வதித்து, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநி திகளிடம் கையளித்தனர்.



இக்கொடியானது எதிர்வரும் கொடி நாளில் லண்டன், ஸ்கொட்லாந்து மற்றும் லிவர்பூல் பகுதிகளில் ஏற்றப்பட்டு, மீண்டும் மாவீரர் நாள் அன்று (27.11.2026) உலகத் தமிழர் வரலாற்று வளாகத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அன் றைய தேசிய நாளின் தொடக்க நிகழ்வாக ஏற்றப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான உறவுகள் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்வின்போது, விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் ரவியின் ஆக்கத்தில் உருவான படைப்புகளான 'தமிழர் படையின் சாதனைச் சமர்கள்' மற்றும் 'வரலாற்றுத் தலைவனின் வழிகாட்டலில்' ஆகிய நூல்களின் வெளியீடும் அறிமுக நிகழ்வும் நடைபெற்றன.

நூல்களின் அறிமுக உரைகளை அரசியல் பொரு ளாதார ஆய்வாளர் பாலகிருஷ்ணன் (பாலா மாஸ்ரர்), படைத் துறை ஆய்வாளர் கலாநிதி பிரபாகரன் (அருஸ்) ஆகியோர்



நிகழ்த்தினர்.

அரங்கம் நிறைந்திருந்த தமிழ்த் தேசியச் செயற்பாட் டாளர்கள் மத்தியில், தமிழ்த் தேசியக் கருத்துகளுடன் இரு நூல்களும் வெளியிடப்பட்டமை பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

மேலும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரித்தானியப் பிரிவின் சார்பாக, மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த சில நாட்களாகப் பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளில் குருதிக்கொடை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிலையில், குருதிக்கொடை செய்தவர்களுக் கான மதிப்பளிப்பு நிகழ்வும் இதே மண்டபத்தில் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

• • •

இந்திய ஜனநாயகத்தை... தொடர்ச்சி...

கூறினார். மேலும், "இந்தியாவில் ஜனநாயகம் தாக்குதலு க்கு உள்ளாகியுள்ளது, நாம் அதைப் பாதுகாக்க வேண்டும்" என்றும் ஃபிலிபெக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. இந்தப் பணியின் மூலம் லட்சக்கணக்கான பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இந்த நீக்கம், தேர்தலை பாரதிய ஜனதா கட்சிக்குச் சாதகமாக மாற்ற உதவும் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், தேர்தல் ஆணையம் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவாகச் செயல்படவில்லை என்றும், இரட்டைப் பதிவுகள் மற்றும் தகுதியற்ற பெயர்களை நீக்குவதற்காகவே இந்தப் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் விளக்கம் அளித்துள்ளது.

ஃபிலிபெக்கின் கருத்துகள் குறித்து இந்திய அரசு இன்னும் அதிகாரப்பூர்வமாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இருப்பினும், அவர் 'இ-விசா' (e-vi-sa) இணையதளம் வழியாக மாநாட்டு விசாவைப் பெற்று இந்தியா வந்ததாக அரசு வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. "எந்த வகையான விசாவில் வந்திருந்தாலும், வெளிநாட்டினர் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் தலையிடக்கூடாது. அவ்வாறு செய்வது விசா விதிமுறைகளை மீறும் செயலாகும்" என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

செல்வராசா கஜேந்திரனிடம்... தொடர்ச்சி...


மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தமையால், தம்மால் அன்றைய தினம் முன்னிலையாக முடியவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், குறித்த நிகழ்வை நிறைவு செய்த பின்னர் விசாரணைக்காக நேரில் முன்னிலையாவதாகக் காவல்துறையினருக்குத் தெரிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


அதற்கமைய, செல்வராசா கஜேந்திரன் நேற்று (20) காலை யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் முன்னிலையானார் என்பது குறிப்பிடத்தக்கது.

2035-ஆம் ஆண்டிற்குள் இஸ்லாம் உலகின் மிகப்பெரிய மதமாக மாறும்

2070-ஆம் ஆண்டிற்குள், உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ மக்கள் தொகையைக் கொண்ட நாடாக அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி, காங்கோ ஜனநாயகக் குடியரசு (Democratic Republic of the Congo) முதலிடத்தைப் பிடிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




பியூ ரிசர்ச் (Pew Research) அமைப்பின் புதிய ஆய்வின்படி, 2035-ஆம் ஆண்டிற்குள் இஸ்லாம் மதம், பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிறிஸ்தவ மதத்தைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மிகப்பெரிய மதமாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தற்போதைய மக்கள் தொகை போக்குகள் தொடர்ந்தால், அடுத்த பத்தாண்டுகளுக்குள் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை 2.57 பில்லியனை எட்டும் என்றும், அதே சமயம் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2.52 பில்லியனாக இருக்கும் என்றும் அந்த அமைப்பு புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2020-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2070-ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய முஸ்லிம் மக்கள் தொகை 80% அதிகரித்து 3.6 பில்லியனை எட்டும்; அதே வேளையில், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 30% அதிகரித்து 3 பில்லியனுக்கும் சற்று குறைவாக இருக்கும் என்று



எதிர்பார்க்கப்படுகிறது. பிற முக்கிய மதக் குழுக்களும் வளர்ச்சியைக் காணும், ஆனால் அவற்றின் வளர்ச்சி விகிதம் சற்று மெதுவாகவே இருக்கும்.

இருப்பினும், பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை 2020 முதல் 2070-ஆம் ஆண்டுக்குள் 23% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே காலகட்டத்தில்,



எந்த மதத்தையும் சாராதவர்களின் எண்ணிக்கையும் 10% குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கணிப்புகள் மக்கள் தொகை போக்குகளை அடிப்படையாகக் கொண்டவை. வரும் தசாப்தங்களில் உலகின் மக்கள் தொகை வளர்ச்சியில் பெரும்பகுதி, கிறிஸ்தவமும் இஸ்லாமும் ஆதிக்கம் செலுத்தும் சஹாராவுக்குக் கீழே உள்ள ஆப்பிரிக்கப் பகுதிகளில் (sub-Saharan Africa) நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் மக்கள் தொகை பொதுவாக இளமையாக உள்ளது. மேலும், பிற மதக் குழுக்களைச் சேர்ந்த குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், முஸ்லிம் குடும்பங்களில் அதிக குழந்தைகள் பிறக்கும் போக்கு காணப்படுகிறது. இந்த இரண்டு காரணிகளும் இஸ்லாம் மதம் வேகமாக வளர்வதற்கு பங்களிக்கின்றன.

மேலும், 2070-ஆம் ஆண்டிற்குள் அமெரிக்கா கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடாக இருக்காது என்றும் பியூ ரிசர்ச் அமைப்பு கணித்துள்ளது. அமெரிக்க மக்கள் தொகையில் கிறிஸ்தவர்களின் பங்கு 48%-க்கும் சற்று குறைவாகவே இருக்கும் என்றும், அதே சமயம் காங்கோ ஜனநாயகக் குடியரசு, உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ மக்கள் தொகையைக் கொண்ட நாடாக அமெரிக்காவை முந்திச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2070-ஆம் ஆண்டில், பாகிஸ்தான் உலகின் மிகப் பெரிய முஸ்லிம் மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இருக்கும் என்றும், அதைத் தொடர்ந்து இந்தியா, நைஜீரியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் இடம்பெறும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிறிஸ்தவம் முதன்மையான மதமாக இருக்கும் பெரும்பாலான நாடுகளில், அது தொடர்ந்து அந்த இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், அமெரிக்காவைப் போலவே கனடாவிலும் ஜெர்மனியிலும் கிறிஸ்தவர்களின் மக்கள் தொகை விகிதம் 50 சதவீதத்திற்குக் கீழே குறையக் கூடும் என்று 'பியூ' (Pew) ஆய்வு நிறுவனம் தெரிவிக்கிறது.



இதற்கிடையில், 2020-ல் 46 சதவீதமாக இருந்த உலக யூதர்களின் மக்கள் தொகையில், 2070-ஆம் ஆண்டிற்குள் 62 சதவீதம் பேர் இஸ்ரேலில் வசிக்கக்கூடும். அமெரிக்காவைப் பொறுத்தவரை, யூதர்களின் எண்ணிக்கையை விட முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று 'பியூ' கணிக்கிறது.

எதிர்காலத்தில் பெரும்பாலான நாடுகளில், எந்த மதத்துடனும் தொடர்பில்லாத மக்களின் எண்ணிக்கை தற்போது இருப்பதை விட அதிகமாக இருக்கும். இருப்பினும், உலகில் மதம் சாராத மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ள சீனாவில், மக்கள் தொகை குறையக்கூடும் என்பதால், உலக அளவில் இத்தகைய மக்களின் விகிதம் குறையும்.

2020 முதல் 2070-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், மத அடையாளத்தைக் கைவிடுபவர்களின் எண்ணிக்கை, மதம் சாராத நிலையிலிருந்து ஏதேனும் ஒரு மதத்தைத் தழுவுபவர்களின் எண்ணிக்கையை விட 117 மில்லியன் அதிகமாக இருக்கும் என்று 'பியூ' குறிப்பிடுகிறது. இவ்வாறு மதம் சார்ந்த அடையாளத்தை மாற்றிக்கொள்பவர்களில் பெரும்பாலோர், முன்பு கிறிஸ்தவர்களாக இருந்தவர்களாகவே இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி: ரஸ்யா ரூடே

தமிழில்: **ஆர்தீகன்**

மண்ணுக்குள் விதையான... தொடர்ச்சி...

பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக் கொள்வோமாக."

இதுதான் அவருடைய 20ஆவது மாவீரர் நாள் இறுதி உரை. தேசியத் தலைவர் 1989 கார்த்திகை 27இல் முதலாவது மாவீரர் தின உரையில் தொடங்கி, 2008 கார்த்திகை 27இல் ஆற்றிய முடிவு உரையையும் ஈழத் தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் இணைந்து எமது தேச விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பதையே ஆழமான கருத்தாகக் கூறியுள்ளார் என்பதே உண்மை.

இனவிடுதலைக்காகப் போராடி ஆகுதியாகிய மாவீரர்கள் அனைவரையும் நினைவுகூருவது எல்லாத் தமிழர்களுடைய கடமையும் உணர்வுமாகும்.

• • •

எம். கே. சிவாஜிலிங்கம்... தொடர்ச்சி...

புரிதல் இங்கு நிலவுகிறது. எம். கே. சிவாஜிலிங்கத்தின் அரசியல் மரபு, இந்தச் சமநிலையின்மையைக் கேள்விக் குள்ளாக்குகிறது; நீதிக்கான போராட்டம் என்பது, உரிமைகள் மீறப்பட்ட மக்களின் இருப்பையும் அடையாளத்தையும் அங்கீகரிப்பதிலிருந்து பிரிக்க முடியாதது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

எனவே, எம். கே. சிவாஜிலிங்கத்தின் மறைவு என்பது ஒரு தனிப்பட்ட அரசியல் ஆளுமையின் இழப்பு மட்டுமல்ல; அது தமிழ்த் தேசிய அரசியல் சிந்தனை, எதிர்ப்பு மற்றும் நினைவுகூரல் ஆகியவற்றைத் தலைமுறைகளுடன் இணைத்த ஒரு குரலின் இழப்பாகும். அவர் எடுத்த ஒவ்வொரு முடிவையும் விமர்சனமின்றிப் போற்றுவதன் மூலம் அல்ல, மாறாக அவர் பகிரங்கமாக முன்வைத்த கொள்கைகளையும், தமிழ்த் தேசியக் கோரிக்கைகளை ஒடுக்கத் தொடர்ந்து முயலும் சூழலில், அக்கோரிக்கைகளுக்கான இடத்தைத் தக்கவைப்பதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பதன் மூலமே அவரது அரசியல் பங்களிப்புகளை நாம் நினைவு கூர வேண்டும்.

எம். கே. சிவாஜிலிங்கம் இன்று நம்மிடையே இல்லை யென்றாலும், அவர் தனது வாழ்நாளை அர்ப் பணித்த அரசியல் கேள்விகள் இன்னும் விடை காணப் படாதவையாகவே உள்ளன. ஈழத் தமிழர்களுக்கு இழைக் கப்பட்ட இனப்படுகொலைக்கு, பாதிக்கப்பட்டவர்க ளும் உயிர் பிழைத்தவர்களும் கோரும் சர்வதேச பொறுப்புக்கூறல் இன்னும் கிடைக்கவில்லை; கட்டாயக் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தகுதியான உண்மையும் நீதியும் கிடைக்கப்பெறவில்லை; மேலும், ஈழத் தமிழர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை என்பது, வரலாற்று ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் மிக முக்கியத்துவம் வாய்ந்த, இன்னும் தீர்க்கப்படாத ஒரு கேள்வியாகவே நீடிக்கிறது.

எம்.கே.சிவாஜிலிங்கத்தை ஒரு துணிச்சலான தமிழ் தேசியவாதியாக நினைவுகூர்வது மட்டுமல்லாமல், அவர் முன்னிறுத்திய கொள்கைகள் வருங்கால சந்ததியினராலும் தொடர்ந்து விவாதிக்கப்படுவதையும், ஆராயப்படுவதையும், முன்னெடுத்துச் செல்லப்படுவதையும் உறுதி செய்வதே நமது பொறுப்பாகும். வரலாற்றிலிருந்து உண்மைகளை அழித்தொழிக்கும் முயற்சியை முறியடித்து, நமது மக்களின் கண்ணியத்தைக் காத்து, சர்வதேச சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, தமிழ் ஈழத்தின் அரசியல் அபிலாஷைகளைப் பாதுகாப்பதே அவருக்கு நாம் செலுத்தும் ஆகச்சிறந்த அஞ்சலியாகும்.

எப்.பி.ஐ. வருகையின் ... தொடர்ச்சி...

திறனை நிரந்தரமாக வலுப்படுத்தும் நீண்டகாலக் கூட்டாண் மையின் ஆரம்பமாக அமைந்துள்ளது.

இவ்விடயத்தில் பூகோள அரசியல் கோணங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. சீன நீதிமன்றங்களில் 2019 முதல் 2026 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட பல தீர்ப்புகள் ஊடாகவும், கொழும்பில் இடம்பெற்ற சுற்றி வளைப்புகள் ஊடாகவும் இலங்கையில் இயங்கும் மோசடி வலையமைப்புகளின் பின்னணியில் சீனக் குற்றக் கும்பல்களின் ஆதிக்கம் இருப்பது உறுதியாகியுள்ளது.

குறிப்பாக, கொழும்பு துறைமுக நகரில் இணைய மோசடிக் கும்பல்களுக்கு இடையிலான மோதலில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்திற்குப் பின்னர் சீன அரசாங்கமும் விழிப்படைந்துள்ளது.

வெளிநாடுகளில் சீனப் பிரஜைகள் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவது சீனாவின் சர்வதேச நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் என்பதால், கூட்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க பீஜிங் முன்வந்துள் ளது.

ஏற்கனவே நீர்கொழும்பு ஹோட்டல் சுற்றிவளைப் பின் போது சீனப் பொலிஸ் குழுவொன்று இலங்கைக்கு வந்து தடயங்களைப் பிரித்தெடுக்க உதவியிருந்தது. எவ் வாறாயினும், தற்போதைய கட்டத்தில் சீனாவின் உதவியை விட அமெரிக்காவின் எப்.பி.ஐ. நிபுணத்துவத்தைப் பெறு வதற்கே இலங்கை முன்னுரிமை அளித்துள்ளது.

எப்.பி.ஐ.யின் இந்த வருகையானது, இலங்கையைப் புவிசார் அரசியல் தளமாகப் பயன்படுத்தி சீனாவை வேவு பார்க்கும் நகர்வாகக் கருதப்பட முடியாதென இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மாறாக, இலங்கைக்குள் ஏற்கனவே ஊடுருவியுள்ள சர்வதேச சைபர் மோசடி வலையமைப்புகளை முறியடிக் கவும், அமெரிக்க மற்றும் இலங்கை மக்களை நிதி மோசடிகளில் இருந்து பாதுகாக்கவுமே இந்த ஒத்துழைப்பு முன்னெடுக்கப்படுகிறது.

ஆனாலும், எப்.பி.ஐ. மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்த நீண்டகாலப் பங்காளித்துவமும், புலனாய்வுப் பகிர்வும் தனியே சைபர் மோசடிகளுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படுமா அல்லது பிராந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்குமா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

எம். கே. சிவாஜிலிங்கத்தின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், அரசியல் தோழர்கள் மற்றும் அனைவருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், தோழமையையும் தெரிவித்துக்கொள் கிறோம்.

எம். கே. சிவாஜிலிங்கத்தின் நினைவுகள், வருங் கால சந்ததியினருக்கு அரசியல் உறுதியையும் வரலாற்றுப் பொறுப்புணர்வையும் வழங்கும் ஊற்றாக இருக்கட்டும். உண்மை, நீதி, கண்ணியம் மற்றும் சுயநிர்ணய உரி மைக்கான போராட்டம், ஈழத் தமிழ் தேசத்தின் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்படும் வரை தொடர் ந்து முன்னெடுக்கப்படட்டும்.

தனிநபர்கள் மறைந்துவிடலாம்; ஆனால், ஒரு தேசத்தின் அபிலாஷைகளை அவர்களுடன் சேர்த்து புதைத்துவிட முடியாது.

• • •

ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து... தொடர்ச்சி...

தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் இச்சலுகைக்கான புதிய விண்ணப்பச் செயல்முறைகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை ஆண்டுதோறும் சுமார் 3,000 வகையான பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் 2,400 மில்லியன் முதல் 3,000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை ஏற்றுமதி வருவாயை ஈட்டி வருகின்றது. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையின் மூலம் 150 மில்லியன் முதல் 200 மில்லியன் டொலர்கள் வரை கூடுதல் வரி நிவாரணத்தை இலங்கை பெறுகின்றது.

சாதாரண ஜி.எஸ்.பி. சலுகையின் கீழ் 7.5 சதவீதம் வரை மட்டுமே வரிக்குறைப்பு கிடைக்கும் நிலையில், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையின் கீழ் 100 சதவீத வரி விலக்கு வழங்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், தொழிலாளர் உரிமைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுதல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றி யத்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதுடன், அரசாங்கமும் அதற்கான உரிய நடவடிக்கை களை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மொத்த தேசிய உற்பத்தியின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டில் இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில், தொடர்ச்சி யாக மூன்று ஆண்டுகள் நடுத்தர வருமான நிலையிலேயே நீடித்தால், ஜி.எஸ்.பி. பிளஸ் விதிகளின்படி எதிர்காலத்தில் இச்சலுகையை இழக்க நேரிடும் வாய்ப்புள்ளது.

இதனை எதிர்கொள்ளும் வகையில், புதிய உலகளாவிய சந்தைகளைக் கண்டறிந்து, 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயை 35 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்துவதற்கான பாரிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

செம்மணி கூட்டுப் புதைகுழிகள் ... தொடர்ச்சி...

செம்மணி சம்பவம் என்பது, இலங்கை தனது கடந்த காலத்தை விசாரிக்கத் தயாராக இருப்பதற்கான ஒரு சோதனை மட்டுமல்ல. உள்நாட்டு வழிமுறைகள் தோல்வியுற்றபோது, சர்வதேச நீதிக்கு பதிலளிக்கும் திறனும் அரசியல் உறுதியும் உள்ளதா என்பதற்கான ஒரு சோதனையாகும்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் போதுமான காலம் காத்திருந்துவிட்டனர்.

உண்மைக்கான அவர்களின் உரிமை மதிக்கப்பட வேண்டும். நீதிக்கான அவர்களின் கோரிக்கைகள் நம்பகமான சட்ட செயல்முறைகள் மூலம் கவனிக்கப்பட வேண்டும். மேலும், சர்வதேசக் குற்றங்கள் நடந்ததற்கான சான்றுகள் நிரூபிக்கப்படும் இடங்களில், பதவி அல்லது அரசியல் செல்வாக்கைப் பொருட்படுத்தாமல், பொறுப்பானவர்கள் பொறுப்பேற்க வைக்கப்பட வேண்டும்.

செம்மணியின் மண், உள்நாட்டுத் தோல்வி மற்றும் சர்வதேச மௌனத்தின் கீழ், சாத்தியமான அட்டூழியங் களுக்கான சான்றுகள் புதைக்கப்படும் மற்றொரு இடமாக மாறிவிடக் கூடாது.

சர்வதேச நீதி, கண்டனத்தைத் தாண்டி, ஈழத் தமிழர்களுக்கான பொறுப்புக்கூறலின் ஒரு அர்த்தமுள்ள கருவியாக மாற வேண்டும்.

• • •

தமிழ்த் தேசியப்... தொடர்ச்சி...

2009இற்குப் பிந்தைய ஈழத் தமிழ் அரசியல் சூழலில் கட்சி மற்றும் பதவிகளுக்காக இறங்கிச் செல்லாமல், தமிழீழ விடுதலை, புலிகள் இயக்கம், இனப்படுகொலை, சர்வதேச விசாரணை, பொதுசன வாக்கெடுப்பு போன்ற விடயங்களில் தன் இறுதிக் கணம் வரையில் விட்டுக்கொடுப்பின்றி சமரச மின்றி வாழ்ந்தார். அத்துடன் தனக்காக வாழாமல் எந்தச் சொத்துக்களையும் சேர்க்காமல் தமிழ் இனத்திற்காக வாழ்ந்தவர் சிவாஜி. இன்றைய காலத்தில் சொந்த வாகனம் இல்லாத ஒரே தமிழ் அரசியல்வாதி அவர் என்பதே பல செய்திகளைச் சொல்கிறது.

தேசப்பற்றாளன், தேசத்தின் மகத்துவ மனிதர் சிவாஜிலிங்கம் அவர்கள், நவம்பர் 14ஆம் திகதி இரவு அவர் காலமானார். நவம்பர் 16ஆம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். அவரது உடல் அவர் தலைமை வகித்த நகர சபைக்கும் வல்வெட்டித்துறைச் சந்திக்கும் எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவர் வாழ்ந்த மண்ணிலேயே இறுதி விடைபெறுதலும் நிகழ்ந்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தில் அவர் நினைவேந்திய மக்களுக்கான விடுதலையே அவருக்கான அஞ்சலி. அவர் வலியுறுத்திய நீதியையும் அவர் கோரிய அரசியல் தீர்வையும் பெறுவதே அவருக்கான மெய்யான அஞ்சலி.

பஹ்ரைனில் மூத்த... தொடர்ச்சி...

குற்றமயமாக்குதல் போன்ற குற்றச்சாட்டுகளைச் சுட்டிக் காட்டி, மனித உரிமை அமைப்புகள் இந்த நடவடிக் கைகளைக் கண்டித்துள்ளன. பயங்கரவாதத்தையும் ஈரானிய செல்வாக்கையும் எதிர்த்துப் போராடுவதற்கு இந்த வழக்குகள் அவசியம் என்று பஹ்ரைன் அதிகாரிகள் கூறுகின்றனர்.

வளைகுடா இராச்சியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை இலக்காகக் கொண்ட ஈரானியத் தாக்குதல்களைத் தொடர்ந்து, பஹ்ரைனுக்கும் ஈரா னுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இந்தத் தீர்ப்பு வந்துள்ளது. பஹ்ரைனின் ஷியா பெரும்பான்மை மக்கள் ஏற்கனவே அரசியல் உரிமைகள் தொடர்பாக அதன் சுன்னி முடியாட்சியுடன் முரண்பட்டுள்ள நிலையில், இந்த பெருந்திரளான தண்டனை அறிவிப்பு மேலும் அமைதியின்மையை தூண்டும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

பெரும் பொருளாதார... தொடர்ச்சி...

மருத்துவச் சேவைகளே பாதிக்கப்பட்டுள்ளன.

காயோ கிரான்மா (Cayo Granma) எனும் சிறிய தீவில், பல மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், ஒரே ஒரு செவிலியர் மட்டுமே 870 குடியிருப்பாளர்களுக்கும் அண்டை பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கும் சிகிச்சை அளித்து வருகிறார். கடந்த மூன்று மாதங்களாக அங்கு குடிநீர் விநியோகம் இல்லாத தால், பாக்டீரியா தொற்றுகளும் தோல் நோய்களும் அதிகரித்துள்ளன. மக்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறுவதால், பல குடியிருப்புகள் ஆள் அரவமின்றி வெறிச்சோடி வருகின்றன.

சமீபத்திய ஆண்டுகளில் கியூபா தனது மக்கள் தொகையில் கால் பகுதியை இழந்திருக்கலாம். அரசு பலவீனமடைந்துள்ள சூழலில், கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டன்ட் தேவாலயங்கள் சமூகப் பணிகளைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, இலவச உணவு களை வழங்குதல், மருந்துகளை விநியோகித்தல் மற்றும் ஏழைகளுக்கு உதவுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. முன்னதாக, அமெரிக்கா 100 மில்லியன் டாலர் மனிதாபிமான உதவியை வழங்கியது; ஆனால், இந்த உதவியை மத மற்றும் தொண்டு நிறுவனங்கள் மட்டுமே விநியோகிக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடை எரிசக்தி நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இருப்பினும், அந்தப் பத்திரிகையாளரிடம் பேசிய கியூபா மக்கள், தங்கள் வாழ்க்கை நிலை மோசமடைந்ததற்கு, நீண்டகாலமாக நீடிக்கும் உள்நாட்டுப் பிரச்சினைகளும், சுற்றுலாத் துறையை நிலைகுலையச் செய்த பெருந் தொற்றின் விளைவுகளுமே முக்கிய காரணங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

பண்ணையாளர்கள்... தொடர்ச்சி...

மேலும், அவ்வாறு உடைத்து அகற்றப்படும் பொருட்கள் உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தி யில் தமது கால்நடைகளைப் பராமரித்து வரும் பண்ணை யாளர்களின் வாழ்வாதாரமும், கால்நடைகளின் பாது காப்பும் தற்போது கேள்விக்குறியாகியுள்ளதாகப் பாதிக் கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

சிறுவர் ஆக்கம்



வாணி
வவுனியா

கீதம்

சத்தம் இல்லா உலகினிலே,
சங்கீதம் தான் என் உயிர் மூச்சு!
வீணை நரம்பில் மீட்டும் போது,
விண்ணும் மண்ணும் மயங்கி நிற்கும்!

ராகம் என்னும் கடலினிலே,
நான் மூழ்கி திளைக்கும் பொழுது,
தாளம் என்னும் அலையினிலே,
என் கவலை எல்லாம் கரைந்து போகும்!

நான் பாடும் ஒவ்வொரு பாடலும்,
என் இதயத்தின் துடிப்பின் கீதம்!
இசை இல்லா வாழ்க்கை என்பது,
வார்த்தை இல்லா கவிதை போல!

இசையே என் கீதம்,
இசையே என் உயிர்!



சு.திகழினி
கன்னியா

இயற்கையின் சீற்றம்

இயற்கை எம்மை ஒரு தாய் போன்று வழிநடத்தும். அது நமக்கு காற்று, நீர், உணவு, நிழல் என அனைத்தையும் அன்போடு தருகிறது.
ஆனால் அதே இயற்கை ஒரு நாள் கோபம் கொண்டால், அது மிகவும் பயங்கரமானதாக மாறி விடும். அந்தக் கோபத்தைத் தான் நாம் இயற்கையின் சீற்றம் என்று சொல்கிறோம்.

வெள்ளம், சுனாமி, புயல், வறட்சி, எரிமலை வெடிப்பு , நிலநடுக்கம் போன்றவை எல்லாம் இயற்கையின் சீற்றங்கள் தான். மனிதன் எவ்வளவு அறிவும் தொழில்நுட்பமும் கொண்டு வளர்ச்சியடைந்தாலும் இயற்கையின் முன்னால் தோற்றுப் போய் விடுவான். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது உடைமைகளை இழப்பார்கள். பல உயிர்கள் இழக்கப்படும்.

இந்தச் சீற்றத்திற்கு சில காரணங்கள் இயற்கையானவை என்றாலும், பெரும்பாலான காரணங்கள் மனிதனால் தான் ஏற்படுகின்றன. நாம் காடுகளை அழித்து மரங்களை வெட்டுகிறோம். கடலிலும் ஆற்றிலும் குப்பைகளைக் கொட்டுகிறோம். வாகனப் புகையாலும் தொழிற்சாலைப் புகையாலும் காற்றை மாசுபடுத்துகிறோம். இதனால் பூமி வெப்பமாகி காலநிலை மாறி, இயற்கை கோபம் கொள்கிறது. நாம் இயற்கையை அழித்தால், இயற்கை நம்மை அழித்து விடும் என்பது தான் உண்மை என்பதை இதிலிருந்து அறியலாம் .

இயற்கையின் சீற்றத்தை முழுமையாகத் தடுக்க முடியாது என்றாலும் அதன் பாதிப்பைக் குறைக்க முடியும். அதற்கு நாம் எம்மால் முடிந்த மரங்களை நட வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். இயற்கையை நேசித்து, அதனோடு இணைந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன்மூலமாக நாம் எம்மையும் இயற்கையையும் பாதுகாக்க முடியும்.



ரா.அக்சயா
புதுக்குடியிருப்பு

குடையாக நான் இருந்தால்....

நான் ஒரு நாள் காலையில் எழுந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! நான் மனிதனாக இல்லை, ஒரு அழகான குடையாக மாறி இருந்தேன்!

முதலில் எனக்கு கொஞ்சம் பயமாக இருந்தது. “ஐயோ! நான் இனி பள்ளிக்கு போக முடியாதா? விளையாட முடியாதா?” என்று நினைத்தேன். ஆனால் கொஞ்ச நேரத்தில் எனக்கு குடையாக இருப்பது ரொம்ப பிடித்துப் போய்விட்டது.


மழை வந்தால் நான் சந்தோஷமாக விரிந்து கொள்வேன். சின்னக் குழந்தைகள் எனக்கு கீழே வந்து ஒளிந்து கொள்வார்கள். அவர்கள் நனையாமல் சிரிப்பதைப் பார்க்கும் போது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி!

வெயில் அடிக்கும் போது, வயதான பாட்டிக்கு நிழல் கொடுப்பேன். அவர்கள் “இந்தக் குடை இல்லைன்னா என்ன ஆகியிருக்கும்!” என்று சொல்லும் போது எனக்கு பெருமையாக இருக்கும்.

காற்று பலமாக அடிக்கும் போது மட்டும் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். காற்று என்னை இப்படியும் அப்படியும் இழுக்கும். ஆனாலும் நான் யாரையும் விட்டு விட மாட்டேன். உறுதியாகப் பிடித்துக் கொள்வேன்.

அன்று இரவு நான் மீண்டும் மனிதனாக மாறினேன். அப்போது தான் எனக்கு புரிந்தது. குடை என்பது வெறும் பொருள் இல்லை. அது மற்றவர்களைக் காக்கும் ஒரு நண்பன்!

குடையாக இருந்த அந்த ஒரு நாள், என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாளாகி விட்டது.



ம.ஹரிணி
இலுப்பங்குளம்



தாயகமும் வாழ்வும்

